# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my Media_Selangor selangortv.my MediaSelangor

திருவள்ளுவர் ஆண்டு 2051 / சார்வாரி ஆண்டு கார்த்திகை மாதம் / டிசம்பர் 2020




# நீருக்கான போராட்டம்!



"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு"

*(நீர் இன்றி உலகம் இயங்காது அவ்வாறே மழையில்லா விட்டால் உலக ஒழுங்கு முறை சிதைவுறும்)*

## மக்களின் மாண்புக்குரிய ஆட்சியாளர்

பக்கம் 8 மற்றும் 9

## சிலாங்கூர் கூ வீடுகளுக்கான நிபந்தனை

பக்கம் 10

## விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியச் சட்டத்தை இயற்றுவீர்

பக்கம் 16

இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, திருக்குறள் மூலம் அருமையான தத்துவ நீதியை, நீரின் முக்கியத்துவத்தை நம் முன்னோர்கள் எடுத்துரைத்து விட்டனர். ஆம் நீரின்றி உலகமில்லை என்றால் மழையும் நீரும் இன்றி சிலாங்கூர் எப்படி இருக்கும்? மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாத நீரை எப்படி மாசுபடுத்துவது என்று சிந்தனையில் ஒரு கூட்டம் செயல்படுவது ஏன்? அரசியலா? பொருளாதாரமா? கத்தி முனையில் இல்லை, வெடிகுண்டால் அல்ல! குடிநீரைக் கொண்டு, மக்களை பிணை கைதிகளாக்க எத்தனிக்கும் தீய சக்திகள் வெற்றி பெற்றால் தோல்வி மக்களுக்கே!

அப்படிப்பட்ட இன்னல்களில் மக்கள் சிக்கிக் கொள்ளாமல் தடுக்க நடக்கும் மாபெரும் போராட்டத்தில் சில வேளைகளில், மாநில அரசாங்கம் தோல்வியை அடைவதுண்டு, அவ்வேளைகளில் மக்களின் கண்டனத்திற்கும், நிந்தனைக்கும், கோபத்திற்கும் அரசாங்கம் ஆட்படுவதுண்டு.

ஆனால் பல வேளைகளில், மக்களின் குடி நீரை மாசு படுத்தும் முயற்சிகளை வெற்றிகரமாக முறியடித்து, நீர் விநியோகத்தில் இடையூர்களின்றி, மிக நியாயமான கட்டணத்தில் சிலாங்கூர், கோலாலம்பூர் மற்றும் புத்ரா ஜெயா மக்கள் தொடர்ந்து நீரைப் பெற நடக்கும் திரைமறைவு போராட்டத்தைப் பற்றி ஏன் நாமும் அறிந்து கொள்ளக் கூடாது!

**(பக்கம் 6 மற்றும் 7ஐ படிக்கத் தவறாதீர்கள்)**

# சிக்காமாட் ஆற்றை ஆழப்படுத்தும் பணி அடுத்தாண்டு தொடங்கும்



காஜாங் – இங்குள்ள சிக்காமாட் ஆற்றை ஆழப்படுத்தும் மற்றும் கரைகளில் தடுப்புகளை அமைக்கும் பணி அடுத்தாண்டு தொடங்கும் என்று சுற்றுச் சூழல் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ஹி லோய் சியான் கூறினார்.

சுமார் ஒரு கோடி வெள்ளி செலவிலான இந்த பணிகள் 12வது மலேசியத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுவதாக அவர் சொன்னார்.

இத்திட்டத்தை அமல்படுத்துவதன் மூலம் அப்பகுதியில் நிலவும் வெள்ளப் பிரச்னைக்கு நீண்ட கால அடிப்படையில் தீர்வு காண முடியும் என்றும் அவர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

இந்த திட்டம் கம்போங் சுங்கை சிக்காமாட் தொடங்கி பத்து கிலோமீட்டர் நீளத்திற்கு மேற்கொள்ளப்படும். அடுத்தாண்டு இறுதிக்குள் இத்திட்டம் முற்றுப் பெறும் என எதிர்பார்க்கப் படுகிறது என்று சம்பந்தப்பட்ட பகுதிக்கு வருகை புரிந்தப் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறினார்.

காஜாங் வட்டாரத்தில் வெள்ளம் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாக விளங்குவது இந்த சுங்கை சிக்காமாட் ஆறு ஆகும். முறையாக பராமரிக்கப்படாத காரணத்தால் ஆற்றில் மணல் நிறைந்து காணப்படுகிறது என்றார் அவர்.

குத்தகையாளர்கள் ஆற்றிலிலுள்ள மணலை அகற்றாமலும் தடுப்புகளை பராமரிக்காமலும் விட்டு விட்டதால் மழை காலத்தில் சீரான நீரோட்டம் தடைபட்டு வெள்ளம் ஏற்படுகிறது என்று காஜாங் சட்டமன்ற உறுப்பினருமான அவர் தெரிவித்தார்.

# தற்காலிகவர்த்தகலைசென்ஸ்திட்டத்தின் வழிவியாபாரிகளுக்கு உதவுவதில் சிலாங்கூர் முன்னிலை

ஷா ஆலம் – தற்காலிக லைசென்ஸ் விநியோக திட்டத்தின் வழி சிலாங்கூர் அரசு பொது மக்களுக்கு குறிப்பாக சிறு வியாபாரிகளுக்கு உதவுவதில் முன்னிலை வகிக்கிறது.

தற்காலிக வர்த்தக லைசென்ஸ் பெற்றவர்கள் அடுத்தாண்டு டிசம்பர் மாதம் வரை வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்க ப்படுவார்கள் என்று ஊராட்சி மன்றங்களுக்கு ஆட்சிக்குழு உறுப்பினர் இங் ஸி ஹான் கூறினார்.

இத்திட்டத்தில் மேலும் அதிகமான வர்த்தகர்களுக்கு வாய்ப்பு வழங்குவதற்கு ஏதுவாக பொருத்தமான மற்றும் பாதுகாப்பான வர்த்தக இடங்களை அடையாளம் காணும் பணியில் ஊராட்சி மன்றங்கள்



தற்போது ஈடுபட்டு வருவதாக அவர் சொன்னார்.

கோலாலம்பூர் மற்றும் புத்ரா ஜெயாவில் தடையற்ற வியாபார மண்டல திட்டம் உருவாக்கம் காண்பதற்கு முன்னதாகவே நாம் இதனை அமல்படுத்தி விட்டோம். வியாபாரிகளின் நலனைக் கருத்தில் கொண்டு இத்திட்டத்தை மற்ற மாநிலங்களும் அமல்படுத்தும் என நம்புகிறோம் என்றார் அவர்.

கோவிட்-19 நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரிகளுக்கு உதவும் வகையில் 500 வெள்ளியை உதவித் தொகையாக வழங்கும் திட்டத்தையும் சிலாங்கூர் அரசு அமல்படுத்தி வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இது தவிர, மாநில அரசு தொடர்ச்சியாக ஆறு ஆண்டுகள் வியாபார கட்டணங்களுக்கு விலக்களித்து வந்துள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

லைசென்ஸ் இல்லாத சிறு வியாபாரிகளுக்கு தற்காலிக லைசென்ஸ் வழங்கும் திட்டத்தை சிலாங்கூரில் உள்ள ஊராட்சி மன்றங்கள் கடந்த ஆகஸ்டு மாதம் முதல் அமல்படுத்தி வருகின்றன.

# தொழிலாளர்களுக்கு முறையான தங்குமிட வசதியை ஏற்படுத்தி தருவீர்

## – முதலாளிகளுக்கு ஆட்சிக்குழு உறுப்பினர் அறிவுறுத்து

ஷா ஆலம் – தொற்று நோய் பரவலைத் தடுப்பதற்கு ஏதுவாக அந்நிய நாட்டினர் உள்பட அனைத்து தொழிலாளர்களுக்கும் முறையான தங்குமிட வசதியை ஏற்படுத்தித் தரும்படி முதலாளிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தொழிலாளர்களுக்கு முறையானத தங்குமிட வசதிகள் செய்து தரப்பட வேண்டும் என்பதை 1990ஆம் ஆண்டு வீடமைப்பு மற்றும் தங்குமிட தரச் சட்டத்தின் 446வது பிரிவு வலியுறுத்துவதாக வீடமைப்பு மற்றும் நகர்ப்புற நல்வாழ்வுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார்.

மலேசிய சுகாதார அமைச்சின் சுகாதார கழகம் கணித்ததை விட கோவிட்-19 நோய்த் தொற்று சம்பவங்கள் அதிகரித்ததற்கு தொழிலாளர் தங்குமிடங்களில் காணப்படும் நெரிசல் மிகுந்த சூழலும் காரணமாக அமைந்துள்ளதாக அவர் சொன்னார்.

அந்நியத் தொழிலாளர்களுக்கான தங்குமிடங்கள் நெரிசல்மிக்கதாகவும் குறுகலானதாகவும் உள்ளதாக உள்ளதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகளை நாங்கள் கடுமையாக கருதுகிறோம். இப்பிரச்னையைக் களைவதில் முதலாளிகள் ஆக்ககரமான பங்கினை ஆற்ற வேண்டும் என்றார் அவர்.

# கம்போங் பாண்டான் வெள்ளப் பிரச்னைக்கு தீர்வு காண

## பொதுப்பணித்துறை–அம்பாங்ஜெயா நகராண்மைக்கழகத்திற்கு உத்தரவு



ஷா ஆலம் – கம்போங் பாண்டான் பகுதியில் ஏற்பட்டு வரும் திடீர் வெள்ளப் பிரச்னைக்குத் தீர்வு காணுமாறு பொதுப்பணித்துறை மற்றும் அம்பாங் ஜெயா நகராண்மைக்கழகத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கடும் மழையின் காரணமாக பெருக்கெடுக்கும் நீரை வெளியேற்றும் அளவுக்கு அங்குள்ள கால்வாய்கள் போதுமான கொள்ளலவைக் கொண்டிருக்கவில்லை என்பது தொடக்க கட்ட ஆய்வில் தெரிய வந்துள்ளதாக பொது மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஸாம் ஹாஷிம் கூறினார்.

உலு லங்காட் மாவட்ட பொதுப்பணித்துறை பொறியியலாளர் மற்றும் அம்பாங் ஜெயா நகராண்மைக்கழக பிரதிநிதி ஆகியோருடன் தாம் வெள்ளம் ஏற்படும் பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

இவ்விவகாரம் தொடர்பில் பல்வேறு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்களின் நலன் கருதி அவற்றை அமலாக்குவதற்கான வழி முறைகள் ஆராயப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இம்மாதம் 15ஆம் தேதி பெய்த கனத்த மழையின் காரணமாக கம்போங் பாண்டான் பகுதியில் வெள்ளம் ஏற்பட்டது.

# ஹிஜ்ரா கடனுதவி திட்டத்தை பயன்படுத்தி கொள்வீர் - இளம் தொழில் முனைவோருக்கு வேண்டுகோள்

ஷா ஆலம் – வர்த்தகத்தில் முன்னேறத் துடிக்கும் இளைஞர்கள் ஹிஜ்ரா வாரியத்தின் கடனுதவி திட்டத்தில் பங்கு கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

புதிய தொழில் முனைவோரை உருவாக்குவதிலும் வர்த்தகத்தை விரிவுபடுத்த விரும்புவோருக்கு உதவுவதிலும் மாநில அரசு உரிய கட்டுப்பாட்டை கொண்டுள்ளதாக இளம் தலைமுறையினர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் முகமது கைருடின் ஓத்மான் கூறினார்.



இத்தகைய நடவடிக்கைகளின் வாயிலாக மாநில அரசின் பொருளாதாரத்தையும் மேம்படுத்த முடியும் என்று அவர் சொன்னார்.

பொருளாதார மேம்பாட்டில் பின்தங்கிவிடாமலிருப்பதை உறுதி செய்ய கிடைக்கும் வாய்ப்புகளை உடனடியாக பற்றிக் கொள்ளும் ஆற்றல் கொண்டவர்களாக இளைஞர்கள் திகழ வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பல்வேறு உதவித் திட்டங்கள் வாயிலாக இளைஞர்களின் முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளின் மாநில அரசு தொடர்ந்து ஈடுபட்டு வரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட அடுத்தாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ஹிஜ்ரா தொழில் முனைவோர் கடனுதவி திட்டத்திற்கு ஒன்றரை கோடி வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாநில அரசு வழங்கும் இந்த வாய்ப்புகளை இளைஞர்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கைருடின் மேலும் சொன்னார்.

இதுவரை ஹிஜ்ரா திட்டத்தின் மூலம் 53, 958 பேர் 51 கோடியே 70 வெள்ளியை வர்த்தக கடனுதவியாக பெற்றுள்ளனர்.

## சிலாங்கூர் அரசின் ஏற்பாட்டில் தையல் இயந்திரங்கள் அன்பளிப்பு




ஷா ஆலம் — சுமார் 7,000 வெள்ளி மதிப்பிலான தையல் இயந்திரங்களை சிலாங்கூர் மாநில அரசு வழங்கியதைக் கண்டு தனித்து வாழும் தாய் ஒருவர் மனம் நெகிழ்ந்து போனார்.

சித்தம் எனப்படும் இந்திய தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மூன்று தையல் இயந்திரங்களும் ஒரு அயன் பெட்டியும் ஜூலியானா பிரான்சிஸ் (வயது 55) என்ற அம்மாதுவுக்கு வழங்கப்பட்டன.

தொழில்முனைவோர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் ஷா ஆலம், செக்சன் 20, பி.கே.என்.எஸ். குடியிருப்பில் உள்ள அம்மாதுவின் வீட்டிற்கு நேரில் சென்று அந்த வர்த்தக தளவாடங்களை ஒப்படைத்தார்.

இந்த உதவி தமக்கு மனநெகிழ்வைத் தருவதாக ஜூலியானா கூறினார். வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு இந்த தையல் இயந்திரங்கள் தமக்கு பெரிதும் உதவும் என்றும் அவர் சொன்னார்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் தன் கணவர் இறந்தது முதல் தாம் தையல் தொழிலை கவனித்து வருவதாக ஜூலியானா தெரிவித்தார். புதிதாக தமக்கு தையல் இயந்திரங்கள் கிடைத்த தன் வழி மேலும் அதிகமானவர்களை வேலைக்கு அமர்த்தவும் புதிய ஆடர்களைப் பெறவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சித்தம் திட்டத்தின் முதல் கட்டமாக சிலாங்கூர் அரசு வர்த்தக தளவாடங்களை வாங்குவதற்கான 175 விண்ணப்பங்களுக்கு அங்கீகாரம் அளித்துள்ளதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கடந்த கடந்த 13ஆம் தேதி அறிவித்திருந்தார்.

இந்நோக்கத்திற்காக 5 லட்சத்து 77 ஆயிரத்து 991 வெள்ளி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். வெற்றி பெற்ற விண்ணப்பதாரர்கள் ஒவ்வொருவருக்கும் பத்தாயிரம் வெள்ளி வரையிலான வர்த்தக தளவாடப் பொருள்கள் வழங்கப்படும்.

## கல்விக் கட்டண விலக்களிப்பு 18,000 குயிஸ், யுனிசெல் மாணவர்கள் பயன்பெறுவர்

ஷா ஆலம் – சிலாங்கூர் மாநில அறிவித்துள்ள பாயு எனப்படும் பல்கலைக்கழக அடிப்படை கட்டண உதவித் திட்டம் குயிஸ் எனப்படும் சிலாங்கூர் அனைத்துலக இஸ்லாமிய பல்கலைக்கழகம் மற்றும் யுனிசெல் எனப்படும் சிலாங்கூர் பல்கலைக்கழக மாணவர்களுக்கு பயனளிக்கும் வகையில் அமையும்.




அவ்விரு உயர்கல்விக் கூட மாணவர்களுக்கும் அடிப்படை கல்விக் கட்டண விலக்களிப்பை வழங்குவது தொடர்பான அறிவிப்பை மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி 2021ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த போது வெளியிட்டார்.

இத்திட்டத்தின் மூலம் எட்டாயிரம் குயிஸ் பல்கலைக்கழக மாணவர்கள் பயன் பெறுவர் என்று அதன் தலைவர் பேராசிரியர் டத்தோ அபு ஹலிம் தமூரி கூறினார். எனினும், இதில் சம்பந்தப்பட்ட தொகை மற்றும் விதிமுறைகள் குறித்து இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றார்.

இந்த கட்டண விலக்களிப்பைப் பெறுவதற்கு மாணவர்கள் எத்தகைய தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. ஆயினும் அனைத்து மாணவர்களும் இத்திட்டத்தில் பயன்பெறுவர் என நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, இந்த திட்டத்தின் மூலம் சுமார் பத்தாயிரம் யுனிசெல் பல்கலைக்கழக மாணவர்கள் 600 வெள்ளி வரை கட்டண விலக்கைப் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக யுனிசெல் பல்கலைக்கழக வர்த்தகத் தொடர்புத் துறைத் தலைவர் ஹஸ்ரில் அபு ஹசான் கூறினார்.

அந்த கட்டண விலக்களிப்பை மூன்று கல்வித் தவணைகளுக்கு பிரிக்க தாங்கள் திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் சொன்னார்.

இந்த பாயு திட்டத்தின் கீழ் பி40 எனப்படும் குறைந்த வருமானம் பெறுவோரின் பிள்ளைகள் அடுத்தாண்டில் சுமார் 600 வெள்ளி விலக்களிப்பை பெறுவர் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்விவகாரம் தொடர்பில் தெளிவான விளக்கத்தைப் பெறுவதற்காக பல்கலைக்கழகத் தரப்பு விரைவில் மாநில அரசுடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அவர் சொன்னார்.

# ஆண்டு இறுதிக்குள் வர்த்தக உரிமத்தை புதுப்பிப்பீர்

## அம்பாங் ஜெயா நகராண்மைக் கழகம் வேண்டுகோள்

ஷா ஆலம் – இவ்வாண்டு இறுதிக்குள் வர்த்தக உரிமத்தை புதுப்பிக்கும்படி வணிகர்களை அம்பாங் ஜெயா நகராண்மைக் கழகம் அறிவுறுத்தியுள்ளது.

அவ்வாறு செய்யத் தவறினால் ஜனவரி முதல் மார்ச் வரையிலான கால கட்டத்திற்கு 200 வெள்ளி அபராதமும் அடுத்து வரும் மாதங்களுக்கு 700 வெள்ளி அபராதமும் விதிக்கப்படும் என்று நகராண்மைக் கழக தலைவர் முகமது பவுசி முகமது யாத்திம் கூறினார். https//. www.icomm.gov.my. எனும் அகப்பக்கம் வாயிலாக வர்த்தக உரிமத்தை வணிகர்கள் புதுப்பிக்கலாம்.

கடந்த அக்டோபர் முதல் தேதி தொடங்கி நவம்பர் 17 ஆம் தேதி வரை நகராண்மைக் கழக பகுதியில் உள்ள 9,959 வணிகர்களில் 804 பேர் தங்கள் வர்த்தக உரிமத்தை புதுப்பித்து விட்டதாக கூறிய அவர், இதன் மூலம் 530,653.30 வெள்ளி வசூலிக்கப்பட்டது என்றார்.



### காஜாங் வட்டாரத்தில் சட்டவிரோதமாக குப்பைகள் கொட்டிய

# 11 லோரிகள் பறிமுதல்

ஷா ஆலம் – இம்மாதத்தில் சட்டவிரோதமாக குப்பைகள் கொட்டிய குற்றத்திற்காக 11 லோரிகளை காஜாங் நகராண்மைக் கழகம் பறிமுதல் செய்தது.

நகராண்மைக் கழகத்தின் சேவை மற்றும் சுகாதார துறையின் கீழுள்ள சுற்றுச்சூழல் பிரிவு மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் அந்த லோரிகள் பறிமுதல் செய்யப்பட்டதாக நகராண்மைக் கழகத் தலைவர் டத்தோ ஜுல்கிப்ளி காலிட் கூறினார்.

ஜாலான் குவாரி சுங்கை லோங், சுங்கை செராய், உலு லங்காட் ஆகிய பகுதிகளில் மூன்று லோரிகள் பறிமுதல் செய்யப்பட்ட வேளையில் எஞ்சிய எட்டு லோரிகளும் மாவட்டத்தின் இதர பகுதிகளில் பறிமுதல் செய்யப்பட்டன என்றார் அவர்.

இந்த குற்றச் செயல்களை புரிந்த தரப்பினர் மீது 31 குற்றப்பதிவுகள் வெளியிடப்பட்டதாக அவர் மேலும் சொன்னார்.

சட்டவிரோதமாக குப்பைகள் கொட்டும் இடங்களின் நுழைவாயில்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் காரணமாக இந்த எண்ணிக்கை கடந்த மாதங்களைக் காட்டிலும் குறைந்து காணப்படுகிறது என்று அவர் தெரிவித்தார்.

# சிலாங்கூரில் வேலையில்லாதவர் விகிதாச்சாரத்தை 5 விழுக்காட்டுக்கும் கீழ் குறைக்க எண்ணம்




ஷா அலாம் – சிலாங்கூர் மாநில இளைஞர் மேம்பாட்டுக்குப் பொறுப்பான ஆட்சிக்குழு உறுப்பினர் முகமாட் கமாருடின் ஓஸ்மான் இம்மாநிலத்தில் வேலையற்றவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கப் பல நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அதனை 5 விழுக்காட்டுக்கும் கீழ் கொண்டுவர எண்ணம் கொண்டிருப்பதாகக் கூறினர்.

இப்பொழுது மாநிலத்தின் வேலையற்றவர்களின் விழுக்காடு 5.5 ஆக இருப்பதை இந்த ஆண்டு இறுதிக்குள் 4.5 விழுக்காடாகக் கொண்டு வருவதற்கு, சில திட்டங்கள் உள்ளதாகவும், பெரிய அளவில் ஷா அலாமில் நடக்கவிருக்கும் ஜலாஜா சிலாங்கூர் 2020 என்னும் வேலை வாய்ப்பு சந்தையும் அதில் அடங்கும் என்றார் அவர்.

இன்று கோலசிலாங்கூர் மூடிய அரங்கில் நடைபெற்ற ஜலாஜா சிலாங்கூர் 2020 என்ற வேலை வாய்ப்பு நேர்காணலுக்கு வருகை புரிந்தபின் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் கூறியதாவது.,

இன்றைய சந்தையில் சுமார் 90 நிறுவனங்கள் பங்குகொள்ளும் என்றும் கோம்பாக்கில் நவம்பர் 21ந்தேதி, பாயா ஜெராஸில் நவம்பர் 22, உலுலங்காட்டில் நவம்பர் 29 மற்றும் ஷா அலாமில் டிசம்பர் 5 ந் தேதிகளில் அந்தச் சந்தைகள் நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். பல்வேறு வகையான தொழில்களுக்கு விரிவுரையாளர்கள், சமய ஆசிரியர்கள், விற்பனை மேல் அதிகாரிகள், ஆய்வாளர்கள், தொழில் நிபுணர்கள் முதல் பண்டகப் பொருளாளர் வரை தேவைப்படுகிறது என்ற அவர்.

இந்த வேலை வாய்ப்பு சந்தையில் கலந்துகொள்ள முன்கூட்டியே இணையம் வழி http://nfdot.com/ereg/views/jobfair, முக நூல் Pusat jobs Malaysia Selangor, படவரி jobs Malaysia selangor தொலைத்தொடர்பு எண் 55247740 அல்லது 03-55231309 மூலமும் பதிந்து கொள்ள வேண்டும் என்றார் அவர், மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையில் மாநில அரசுக்குத் திருப்தி அளிக்கவில்லை, என்றும் அடுத்த ஆண்டும் இன்னும் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கும் பல்வேறு முயற்சிகளை தாங்கள் எடுத்து வருவதாகவும் கூறிய அவர் கூறினார்.

## கட்டண பாக்கி காரணமாக டி ஏரா குடியிருப்பில் நீர் விநியோகம் துண்டிப்பு

கிள்ளான் – ஒன்பது லட்சம் வெள்ளி குடிநீர் கட்டண பாக்கி செலுத்தப்படாத காரணத்தால் கம்போங் ஜாவா, டி ஏரா அடுக்குமாடி குடியிருப்பில் கடந்த நான்கு நாட்களாக நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் அங்கு வசிக்கும் 315 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விவகாரம் தொடர்பில் புகார் கிடைக்கப் பெற்றதை தொடர்ந்து செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் ஜோர்ஜ் குணராஜ் குடியிருப்பாளர்கள் மற்றும் ஷா ஆலம் மாநகர் மன்றத்தால் நியமிக்கப்பட்ட நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் சந்திப்பு நடத்தினார். இது தவிர, ஆயர் சிலாங்கூர் நிறுவனத்தின் அதிகாரிகளுடனும் அவர் பேச்சு நடத்தினார்.

இவ்விவகாரத்திற்கு தற்காலிக அடிப்படையில் தீர்வு காண்பதற்கு ஏதுவாக கால அவகாசம் வழங்கிய ஆயர் சிலாங்கூர் நிறுவனத்திற்கு தாம் நன்றி தெரிவித்து கொள்வதாக குணராஜ் கூறினார்.

இந்த கட்டண பாக்கி பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படுவதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# வெ.2.16 கோடி முதலீட்டை ஈர்க்க முதலீட்டாளர் நட்புறவு கொள்கை உதவி

ஷா ஆலம் – சிலாங்கூர் மாநில அரசு கடந்த ஜனவரி மாதம் அமல்படுத்திய 100 நாளில் அங்கீகாரம் எனும் கொள்கை 2 கோடியே 16 லட்சம் வெள்ளி மதிப்பிலான முதலீடுகளை ஈர்க்க உதவியது.

நில மேம்பாடு தொடர்பான நிர்வாக மற்றும் திட்டமிடல் விண்ணப்பத்தை பரிசீலிப்பதற்கான கால அவகாசத்தை 270 நாட்களிலிருந்து 100 நாட்களாக குறைக்கும் அரசாங்கத்தின் கொள்கை முதலீட்டாளர் நட்புறவை அடிப்படையாக கொண்டுள்ளது என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

முன்பு முதலீடு தொடர்பான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுவதற்கு முதலீட்டாளர்கள் ஆறு முதல் ஒன்பது மாதங்கள் வரை காத்திருக்க வேண்டியதாக இருந்தது என்று அவர் குறிப்பிட்டார்.



இந்த புதிய கொள்கை அமல்படுத்தப்பட்டப் பின்னர் முதலீடுகளின் மதிப்பு 2 கோடியே 16 லட்சம் வெள்ளியாக உயர்ந்தது. இது சிறந்த வளர்ச்சிக்கான அறிகுறியாகும் விளங்குகிறது என்று அவர் சொன்னார்.

கோவிட்-19 நோய்த் தொற்றுப் பிரச்னைக்குப் பிந்தைய பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் இத்திட்டம் மேலும் மெருகூட்டப்பட்டு அமல்படுத்தப்படும் என்றார் அவர்.

முதலீட்டாளர்களுக்கு நட்புறவான இந்த கொள்கையை அனைவரும் வரவேற்கும் அதேவேளையில் மக்களின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டார்.

நில மேம்பாடு தொடர்பான விண்ணப்பங்களுக்கு 100 நாளில் அங்கீகாரம எனும் கொள்கை உடனடியாக அமலுக்கு வருவதாக சிலாங்கூர் மாநில அரசு ஜனவரி மாதம் 24ஆம் தேதி அறிவித்தது.

# வேலை வாய்ப்பை ஏற்படுத்தி தருவதில் பாகுபாடு காட்டப்படாது- சிலாங்கூர் அரசு உத்தரவாதம்

ஷா ஆலம் – சிலாங்கூர் அரசின் 2020 வேலை வாய்ப்பு பயணத் திட்டத்தின் வாயிலாக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதில் முன்னாள் கைதிகள் உள்பட எந்த தரப்பினருக்கும் மாநில அரசு பாகுபாடு காட்டியதில்லை.


பொருத்தமான வேலைகளை அனைவரும் பெறுவதற்கு ஏதுவாக வாய்ப்புகள் சமநிலையாக வழங்கப்படுகிறது என்று இளம் தலைமுறையினர் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் முகமது கைருடின் ஒத்மான் கூறினார்.

நாம் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறோம். ஒருவர் முன்னாள் கைதியா? இல்லையா? என்பது அவருக்கு மட்டுமே தெரியும். ஆகவே, இவ்விவகாரத்தில் அந்தஸ்து பார்க்கப்படுகிறது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றார் அவர்.

முன்னாள் கைதிகள் வேலை தேடி நேர்காணலுக்கு வருவது வரவேற்கத்தக்கது. சுயகாலில் நிற்கவேண்டும் என்ற அவர்களின் முனைப்புக்கு உரிய தளத்தை ஏற்படுத்தித் தருவது மாநில அரசின் பொறுப்பாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சிலாங்கூர் அரசின் ஏற்பாட்டிலான இந்த வேலை வாய்ப்பு சந்தை கோல சிலாங்கூர், கோம்பாக், சுங்கை பூலோ, உலு லங்காட் ஆகிய பகுதிகளில் கடந்த மாதம் நடைபெற்ற வேளையில் ஷா ஆலமில் இம்மாதம் 5 மற்றும் 6 ஆம் தேதிகளில் நடைபெறுகிறது.

# இயங்கலை வாயிலான நேர்காணலுக்கு தயார்படுத்திக் கொள்வீர்




ஷா ஆலம் – இயங்கலை வாயிலான நேர்முகப் பேட்டிக்கு தயார்படுத்திக் கொள்வதற்குரிய ஆற்றலை வளர்த்துக் கொள்ளுமாறு இளைய தலைமுறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கோவிட்-19 நோய்த் தொற்று சம்பவங்கள் காரணமாக பெரும்பாலான முதலாளிகள் வேலைக்கு ஆள் எடுப்பதிலும் அவர்களின் அவர்களின் திறமையை மதிப்பிடுவதிலும் இந்த புதிய அணுகுமுறையை கையாளுகின்றனர் என்று அவர் சொன்னார்.

முதலாளிகளின் முதல் தேர்வாக விளங்கும் தகவல் தொழில்நுட்ப ஆற்றலை இளைய தலைமுறையினர் கொண்டிருப்பது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கோல சிலாங்கூர், சவுஜானா புத்ரா, கோம்பாக் ஆகிய பகுதிகளில் நடைபெற்ற வேலை வாய்ப்பு சந்தைகளில் பங்கேற்ற 60 நிறுவனங்களில் பாதிக்கும் மேற்பட்டவை நேர்காணலை இயங்கலை வாயிலாக நடத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# சிலாங்கூரில் 800,000 பேர் இலக்கவியல் துறைக்கு இன்னும் தயாராகவில்லை



ஷா ஆலம்– சிலாங்கூர் மாநிலத்தில் வசிப்போரில் சுமார் எட்டு லட்சம் பேர் இலக்கவியல் சூழலுக்கு இன்னு ம் தங்களை தயார் படுத்திக் கொள்ளவில்லை.

முதியோர், சிறு வணிகர்கள், பி40 எனப்படும் குறைந்த வருமானம் பெறும் இளைஞர்கள் ஆகிய தரப்பினரே இலக்கவியல் துறைக்கு இன்னும் தயாராகவில்லை என்று எம்.பி.ஐ. எனப்படும் மந்திரி புசார் கழகத்தின் இலக்கவியல் பிரிவுத் தலைவர் கமாருள் நிசாம் காசிம் கூறினார். மலேசியர்களில் 12.6 விழுக்காட்டினர் இணையத்தை பயன்படுத்தவில்லை என்பது தொடர்பு மற்றும் பல்லூடக ஆணையம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

இதன் அடிப்படையில் பார்த்தால் சிலாங்கூரில் சுமார் 831,000 பேர் இணைய ஆற்றலை பெறாமல் உள்ளனர் என்றார் அவர். இத்தகைய தரப்பினரை இலக்காக கொண்டு உரிய பயிற்சிகளை வழங்குவதற்காக ஆயிரம் இலக்கவியல் பங்காளிகளை தாங்கள் தேர்வு செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கோவிட்-19 சம்பவங்களுக்கு பிந்தைய புதிய இயல்பு வாழ்க்கைக்கு சமுதாயத்தை தயார் படுத்தும் வகையில் இலக்கவியல் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கும் முயற்சியில் எம்.பி.ஐ. தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறினார். இலக்கவியலின் முக்கியத்துவத்தை பொதுமக்களுக்கு உணர்த்துவதில் மக்கள் பிரதிநிதிகள் முக்கிய பங்கினை ஆற்ற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

முதியோர், சிறு மற்றும் நடுத்தர தொழில் துறையினர், பி40 தரப்பினருக்கு ஆகியோரின் வாழ்க்கை தர மேம்பாட்டை உறுதி செய்வதற்காக மாநில அரசு அடுத்தாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் 30 லட்சம் வெள்ளியை ஒதுக்கியுள்ளது.

## நீரை மாசுபடுத்துவோருக்கு தண்டனை வழங்க வகை செய்யும் லுவாஸ் சட்டத்திருத்தத்திற்கு சுல்தான் ஒப்புதல்

ஷா ஆலம் – நீரை மாசுபடுத்துவோருக்கு கடும் தண்டனை வழங்க வகை செய்யும் சிலாங்கூர் நீர் நிர்வாக வாரிய சட்டத்திற்கு (லுவாஸ்) மேன்மை தங்கிய சிலாங்கூர் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் ஒப்புதல் அளித்துள்ளார்.

சுல்தானின் ஒப்புதலைத் தொடர்ந்து லுவாஸ் மசோதா உடனடியாக சட்டமாக பிரகடனப்படுத்தப்படுகிறது. நீர் மாசுபடுவதற்கு காரணமானவர்கள் மீது இனி இச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

நீர் துய்மைக்கேட்டுப் பிரச்னையை உடனடியாக கண்டு பிடித்து நீர் விநியோகத்திற்கு எந்த பாதிப்பும் வராத வகையில் தீர்வு கண்ட லுவாஸ் மற்றும் ஆயர் சிலாங்கூர் பணியாளர்களுக்கும் மாநில அரசு அதிகாரிகளுக்கும் தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

நீரை மாசுபடுத்துவோருக்கு கட்டாயச் சிறைத்தண்டனை மற்றும் பத்து லட்சம் வெள்ளி வரையில் அபராதம் விதிக்க வகை செய்யும் லுவாஸ் சட்டத்திருத்த மசோதாவை சிலாங்கூர் சட்டமன்றம் கடந்த மாதம் 9ஆம் தேதி அங்கீகரித்தது.

## சுங்கை துவா சட்டமன்ற தொகுதிக்கு வெ. 100,000 மானியம் - மந்திரி புசார் வழங்கினார்



ஷா ஆலம் – சுங்கை துவா சட்டமன்ற தொகுதிக்கு மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி ஒரு லட்சம் வெள்ளி மானியம் வழங்கினார். இந்த மானியம் 600 தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் பொது அமைப்புக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

செலாயாங் சதுக்கத்தில உள்ள சுங்கை துவா சட்டமன்ற தொகுதி சேவை மையத்தில் நடைபெற்ற நிகழ்வில் பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள், பெற்றோர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கங்களுக்கு இந்த மானியத்தை அவர் வழங்கினார்.

சுங்கை துவா சட்டமன்ற உறுப்பினருமான அமிருடின், நிகழ்வில் கலந்து கொண்டவர்களுடன் கலந்துரையாடியதோடு அவர்களின் குறைகளையும் கேட்டறிந்தார்.

பின்னர் அவர், ஜாலான் ஸ்ரீ செலாயாங்கில் 0.2 ஹெக்டர் நிலப்பரப்பில் உருவாக்கி வரும் பொழுது போக்கு மையத்தை பார்வையிட்டார்.

சுமார் ஆறு லட்சம் வெள்ளி செலவிலான இதன் முதல் கட்டப்பணி இவ்வாண்டு இறுதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## வறட்சி காலத்தில் நீர் பற்றாக்குறை பிரச்சனையை தீர்க்க செயல் திட்டம்

ஷா ஆலம் – நீண்ட வறட்சி காலத்தில் ஏற்படக்கூடிய நீர் பற்றாக்குறை பிரச்சனையை சமாளிக்கும் விதமாக சிலாங்கூர் அரசு தயார் நிலை செயல் திட்டத்தை வரைந்து வருகிறது.

வறட்சி ஏற்படும் சமயங்களில் போதுமான அளவு நீர் விநியோகம் இருப்பதை உறுதி செய்வதற்காக இவ்விவகாரம் மீது இன்னும் சில மாதங்களில் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படவிருப்பதாக பொது மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார்.

அடுத்த பத்தாண்டுகளில் நீர் பற்றாக்குறை பிரச்சனை ஆற்றுத் தூய்மைக்கேடு மற்றும் குழாய் உடைப்பின் காரணமாக மட்டுமின்றி வறட்சியின் வாயிலாகவும் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றார் அவர்.

தற்போதைக்கு வறட்சி ஏற்படக்கூடிய சாத்தியம் இல்லாவிட்டாலும் இந்த விஷயத்தில் நாம் அலட்சியமாக இருந்து விடக்கூடாது. ஏனென்றால் கடந்த 2014இல் கடுமையான வறட்சியை எதிர் நோக்கிய அனுபவம் நமக்கு உண்டு என அவர் குறிப்பிட்டார்.

இதன் காரணமாகவே ஹோராஸ், ஓ.ஆர்.எஸ். போன்ற மாற்று நீர் உற்பத்தி திட்டங்கள் அமல் செய்யப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

## விநியோகத் தடையை சரி செய்யும் விஷயத்தில் நீரையும் மின்சாரத்தையும் ஒப்பிடக் கூடாது

ஷா ஆலம்– நீர் விநியோகத் தடையை சரி செய்யும் பணியுடன் தடைபட்ட மின் இணைப்பை மீண்டும் ஏற்படுத்தும் பணியுடன் ஒப்பிடக்கூடாது என்று பொது மற்றும் அடிப்படை வசதிகள் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார்.

நீர் விநியோகத்தை மீண்டும் ஏற்படுத்தும் விஷயத்தில் பாதிக்கப்பட்ட இடங்கள் மற்றும் நீர் அழுத்தம் போன்ற அம்சங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளதால் அப்பணியை மேற்கொள்வதில் தாமதம் ஏற்படும்



என்று அவர் சொன்னார்.

நீர் மாசுபாடு பிரச்னையை வெற்றிகரமாக கையாண்ட பின்னர் முதல் கட்டமாக நீர் சமநிலை குளத்திற்கு பாய்ச்சப்படும். இதற்கு 12 மணி நேரம் பிடிக்கும். பின்னர் முதலாவது குளம் மற்றும் சேவை குளம் ஆகியவை நிரப்பப்பட்டப் பின்னரே பொதுமக்களுக்கு நீர் விநியோகம் செய்யப்படும் என்றார் அவர். அதோடு மட்டுமின்றி பயனீட்டாளர்கள் வசிக்கும் இடத்தின் தொலைவு மற்றும் நீர் அழுத்தம் ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதன் காரணமாக சில இடங்களில் நீர் விநியோகம் வழக்க நிலைக்குத் திரும்ப நான்கு நாட்கள் வரை ஆகிறது. நீர் விநியோகத்தை வழக்க நிலைக்கு கொண்டு வருவதில் குறுக்கு வழி என்று எதுவும் கிடையாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# நீர் வளங்களை 24 மணி நேரமும் கண்காணிக்க விரைவு பணிப்படை உருவாக்கம்

ஷா ஆலம் – சிலாங்கூரில் நீர் தூய்மைக்கேட்டுச் சம்பவங்கள் நிகழ்வதை தடுப்பதற்காக விரைவு பணிப்படையை லுவாஸ் எனப்படும் சிலாங்கூர் நீர் நிர்வாக வாரியம் அமைத்துள்ளது.

இந்த பணிப்படை நேற்று முன்தினம் செயல்படத் தொடங்கியது. அந்த பணிப் படையில் ஆயர் சிலாங்கூர் நிறுவனம், சுற்றுச்சூழல் துறை, தேசிய நீர் சேவை ஆணையம் ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளதாக லுவாஸ் அறிக்கை ஒன்றில் தெரிவித்தது.

மேலும், ஊராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், நில மற்றும் மாவட்ட அதிகாரிகள் மற்றும் இதர அரசு துறைகளின் உறுப்பினர்களும் இடம் பெற்றுள்ளதாக அது மேலும் கூறியது.




பிரச்சனைக்குரிய இடங்களாக கருதப்படும் சுங்கை சிலாங்கூர், சுங்கை கிள்ளான் மற்றும் சுங்கை செமினி ஆற்றோரங்களில் இந்த கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்படும். இதன் மூலம் ஆறுகளில் தூய்மைக்கேடு ஏற்படுவதை தடுக்க முடியும் என்பதோடு நீர் சுத்திகரிப்பு மையங்களில் பணிகள் நிறுத்தப்படும் சம்பவங்களை குறைக்கவும் முடியும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் நீர் வளங்கள் தொடர்ந்து பாதுகாக்கப்படுவதை உறுதி செய்ய இந்த கண்காணிப்பு பணி 24 மணி நேரமும் மேற்கொள்ளப்படுகிறது. சிலாங்கூர் மாநில நீர் வள மாசுபாடு தடுப்பு அவசர பணிக் குழுவின் செயலகமாகவும் இந்த விரைவு பணிப்படை விளங்கும்.

# நீர் விநியோகத் தடை ஏற்படாத வகையில் 13 தூய்மைக்கேட்டுச் சம்பவங்களுக்கு தீர்வு



ஷா ஆலம் – நீர் விநியோகத் தடை ஏற்படாத வகையில் 13 தூய்மைக்கேட்டுச் சம்பவங்களுக்கு இவ்வாண்டில் தீர்வு காணப்பட்டுள்ளதாக மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

நீரில் துர்நாற்றம் கலந்த எட்டு தூய்மைக்கேட்டுச் சம்பவங்களை தவிர்க்க இயலாத சூழல் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

துர்நாற்றத்தை கண்டறியும் தொழில் நுட்பம் கைவசம் இல்லாததே இதற்கு காரணம் என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

நீரில் கலந்துள்ள துர்நாற்றத்தை முகர்ந்து பார்ப்பதன் மூலமாக மட்டுமே கண்டறியும் கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். இதுவே நமக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்துகிறது என்றார் அவர்.

நீர் சுத்திகரிப்பு மையத்தை மூடும் சாத்தியம் கொண்ட 21 நீர் தூய்மைக்கேட்டுச் சம்பவங்கள் இவ்வாண்டு அடையாளம் காணப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாண்டு அக்டோபர் மாதம் வரை 60 விழுக்காட்டு நீர் தூய்மைக்கேட்டுச் சம்பவங்களுக்கு ஆயர் சிலாங்கூர் நிறுவனம் தீர்வு கண்டுள்ளதாக பொது மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுத் துறைக்கான ஆட்சிக் குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறியிருந்தார்.

# 60 விழுக்காட்டு நீர் தூய்மைக்கேட்டுப் பிரச்னை முன்கூட்டியே கண்டறியப்பட்டு தீர்க்கப்பட்டது

ஷா ஆலம் – இவ்வாண்டு ஜனவரி முதல் அக்டோபர் 30ஆம் தேதி வரையிலான காலக்கட்டத்தில் அறுபது விழுக்காட்டிற்கும் மேற்பட்ட நீர் தூய்மைக்கேட்டுப் பிரச்னை முன்கூட்டியே கண்டறியப்பட்டு தீர்க்கப்பட்டதாக பொது மற்றும் அடிப்படை வசதிகள் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் இஞ்சினியர் இஷாம் ஹஷிம் கூறினார்.

அக்காலக்கட்டத்தில் லுவாஸ் எனப்படும் சிலாங்கூர் நீர் நிர்வாக வாரியம் மற்றும் ஆயர் சிலாங்கூர் நிறுவனம் ஆகிய தரப்பினர் 20 நீர் தூய்மைக் கேட்டு சம்பவங்களை அடையாளம் கண்டதாக அவர் சொன்னார். அவற்றில் 13 நீர் மாசுபாடு சம்பவங்கள் முன்கூட்டியே கண்டறியப்பட்டு நீர் சுத்திகரிப்பு மையங்கள் மூடப்படும் சூழல் ஏற்படாத வண்ணம் தீர்வு காணப்பட்டது. எனினும், ஏழு சம்பவங்களை முன்கூட்டியே தடுக்க முடியாத சூழல் ஏற்பட்டது என்றார் அவர். அந்த 20 தூய்மைக்கேட்டு சம்பவங்களில் ஒன்பது நீரில் எண்ணெய் கலந்ததால் ஏற்பட்டதாகும். ஏழு சம்பவங்கள் நீரில் காணப்பட்ட துர்நாற்றப் பிரச்னை சம்பந்தப்பட்டதாகும். மூன்று சம்பவங்கள் தொழிலியல் கழிவுகள் சம்பந்தப்பட்டவை என்பதோடு மேலும் ஒரு சம்பவம் கலங்கிய நீரினால் உண்டானது என்று அவர் தெரிவித்தார்.

எனினும், அண்மைய நாட்களில் பல நீர் மாசுபாடு சம்பவங்கள் முன்னதாக கண்டறியப்பட்டு சுத்திகரிப்பு மையங்களுக்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் தீர்வு காணப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இங்குள்ள மாநில சட்டமன்ற கட்டிடத்தில் இன்று நடைபெற்ற சுங்கை சிலாங்கூர் மற்றும் சுங்கை செமினியில் நீர் விநியோக பிரச்னைக்கு தீர்வு காண்பது தொடர்பான விளக்கமளிப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டப் பின்னர் அவர் இதனைச் சொன்னார்.



# மக்களின் மாண்புக்குரிய ஆட்சியாளர்



மேன்மை தங்கிய சுல்தான் அவர்களின் 75வது அகவையை முன்னிட்டு வரும் டிசம்பர் 11ஆம் தேதி வைர விழாவாக அனுசரிக்கப்படுகிறது.

ஆயினும், இந்த ஆண்டு சிக்கலான சூழ்நிலையில் உள்ளதால் சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் அவர்கள் இந்த தினத்தை மக்களை தனது இதயத்திற்கு நெருக்கமாக வைத்திருக்கும் நாளாக அனுசரிக்கிறார்.

கோவிட்-19 நோய் தொடர்பான நிலவரங்களை அணுக்கமாக கண்காணித்து வரும் சுல்தான், அந்நோய்ப் பரவலை தடுப்பதற்கு ஏதுவாக நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறைகளை பின்பற்றும்படி பொதுமக்களை அயராமல் வலியுறுத்தி வருகிறார்.

மக்கள் மீது கொண்டுள்ள கரிசனம் காரணமாக நிபந்தனையுடன் கூடிய நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை பின்பற்றப்படுவதை உறுதி செய்வதில் உறுதியான நிலைப்பாட்டை கடைபிடிக்கும்படி ஊராட்சி மன்ற அதிகாரிகளையும் காவல் துறையையும் அறிவுறுத்தினார். அதே சமயம் நாட்டிற்கு சேவையாற்றுவதில் ஈடுபாட்டையும் அர்ப்பண உணர்வையும் உயர் நிலையில் வெளிப்படுத்திய முன்களப் பணியாளர்களுக்கு குறிப்பாக சுங்கை பூலோ மருத்துவமனைக்கு தனது பாராட்டுகளை அவர் தெரிவித்துக் கொண்டார்.

அண்மையில் நடைபெற்ற மெலிடுர் ராசுல் 1442 ஹிஜ்ரா விழாவுக்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியில், அரசியல்வாதிகள் ஒன்றுபட வேண்டும் என்பதோடு அரசாங்கத்தின் திட்டங்களுக்கும் ஆதரவளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். மக்கள் தொடர்ந்து சுபிட்சத்துடனும் நல்லிணக்கத்துடனும் வாழ்வதை உறுதி செய்வதற்கு ஏதுவாக சிறந்த தீர்வுகளைக் காணும்படியும் அவர் வலியுறுத்தினார்.

கிள்ளான் பள்ளத்தாக்குப் பகுதியில் தொடர்ச்சியாக நீர் விநியோகத் தடை ஏற்பட்டு வந்ததைத் தொடர்ந்து ஆற்று நீர் மாசுபடும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வது குறித்து தனது கவலையை சுல்தான் வெளிப்படுத்தியிருந்தார்.

நீர் மாசடையும் பிரச்னையை அரசியலாக்க வேண்டாம் என மத்திய மற்றும் மாநில அரசுகளை கடந்த அக்டோபர் மாதம் 8ஆம் தேதி முதல் வலியுறுத்தி வந்த அவர், அப்பிரச்னைக்கு உடனடித் தீர்வு காணும்படியும் கேட்டுக் கொண்டார்.

நவம்பர் மாதம் 8ஆம் தேதி தம்மை சந்திக்க மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியை பணித்த சுல்தான், நீர் மாசுபடும் பிரச்னைக்கு காரணமானவர்களுக்கு சிறைத்தண்டனை மற்றும் அதிகப்பட்ச அபராதம் உள்பட கடுமையான தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி உத்தவிட்டார்.

இவை தவிர்த்து, நாட்டின் அரசியல் நிலவரங்களையும் சுல்தான் ஷராபுடின் அணுக்கமாக கவனித்து வந்தார்.

அண்மையில் நடைபெற்ற 14வது சிலாங்கூர் சட்டமன்றத்தின் மூன்றாம் தவணைக்கான முதலாவது கூட்டத் தொடரை தொடக்கி வைத்து அரச உரையாற்றிய சுல்தான், மக்களின் சிறப்பான வாழ்க்கைத் தரத்தை உறுதி செய்வதில் கவனம் செலுத்தும்படி சிலாங்கூர் மாநிலத் தலைவர்களை கேட்டுக் கொண்டார்.

பொதுச்சேவைத் துறையில் காணப்படும் ஊழல் குறித்தும் தமது உரையில் பேசிய அவர், இத்தகைய நெறியற்ற செயல்கள் மாநில அரசு மற்றும் ஊராட்சி மன்றங்களின் கெரவத்திற்கு பெரும் இழுக்கை ஏற்படுத்தும் என்றார்.

இது போன்ற விஷயங்களில் சுல்தான் ஷராபுடின் அக்கறை காட்டுவது வழக்கத்திற்கு மாறான செயல் அல்ல. நமது ஆட்சியாளர் நன்கு கற்றறிந்தவர் என்ற பெருமைக்குரியவர். அவர் புத்தகம் வாசிப்பதில் அளவற்ற ஆர்வம் கொண்டவர் என்பதோடு பல விஷயங்களில் ஆழ்ந்த புலமையும் கொண்டவர். மாநில சுல்தான் என்ற முறையில் கடந்த 19 ஆண்டுகளாக அவர் புரிந்து வரும் ஆட்சியில் இது நிரூபிக்கப்பட்டுள்ளது.

உழைப்பதில் சளைக்காத ஆட்சியாளர் என்றும் சுல்தான் ஷராபுடின் அறியப்படுகிறார். சிலாங்கூர் அரசு செயலகம், கோலாலம்பூர் மாவட்ட அலுவலகம் ஆகிய இடங்களில் பணியாற்றியதன் மூலம் தனது 23 வது வயதிலேயே அரசாங்க ஊழியராக பணியாற்றும் அனுபவத்தை அவ பெற்றிருக்கிறார். 1968ஆம் ஆண்டில் படிப்பை முடித்து பிரிட்டனிலிருந்து திரும்பியவுடன் கோலாலம்பூர் போலீஸ் துறையிலும் அவர் பணியாற்றியுள்ளார்.

மேன்மை தங்கிய சுல்தான் அவர்கள் உயர் கல்வி பெறுவதற்கு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டார். 1960ஆம் ஆண்டு முதல் மேற்கு ஆஸ்திரேலியாவின் பெர்த் நகரிலுள்ள ஹேல் ஸ்கூல் எனும் கல்வி மையத்திலும் 1964ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்து, சர்ரே நகரிலுள்ள லேங்ஹேர்ட் கல்வி கழகத்திலும் உயர் கல்வி பெற்றார். தனது ஆரம்பக் கல்வியை அவர் தனது ஒன்பதாவது வயதில் கோலாலம்பூர் மலாய் ஆரம்ப பள்ளியிலும் 1954 முதல் 1959 வரை சென்ட், ஜோன் இன்ஸ்டிடியூஷனிலும் பெற்றார்.

## வீரதீரச் செயல்களில் ஆட்சியாளரின் ஈடுபாடு

சிலாங்கூர் ஆட்சியாளரின் மிகவும் தனித்துவமிக்க அம்சம் என்னவென்றால் சவால்களை எதிர்கொள்வதில் ஆர்வம் கொண்டவர் என்பதுதான். அவர் புரிந்த சாகசம் நிறைந்த சாதனைகளில் சிலவற்றை இங்கு குறிப்பிடலாம். தனது 30வது வயதில் கினாபாலு மலை உச்சியை அடைந்து சாதனை படைத்தார். 1995ஆம் ஆண்டில் எஸ்.வை. ஜூக்ரா எனும் ஆடம்பர படகில் உலகை வலம் வந்தார். இந்த பயணத்தை முடிக்க அவருக்கு 22 மாதங்கள் பிடித்தன. இந்த சாதனைக்காக அவர் மலேசிய சாதனை புத்தகத்திலும் அவர் இடம் பிடித்தார்.

பழைய கார்கள் மீது கொண்டிருந்த அளவில்லா பிரியம் அவரை உலகின் பல இடங்களை வலம் வருவதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்தியது.1997இல் 16,000 கிலோமீட்டர் நீளம் கொண்ட பீக்கிங் முதல் பாரிஸ் வரையிலான பழைய கார் பந்தயத்தில் அவர் பங்கேற்றார். 15 நாடுகளை உள்ளடக்கிய அந்த பந்தயத்தை 1932ஆம் ஆண்டு போர்ட் பி ரக காரில் 43 நாட்களில் முடித்து சாதனை படைத்தார். இந்த பந்தயத்தில் அவருக்கு விண்டேஜ்

ரக கார் பிரிவில் வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

பத்தாண்டுகள் கழித்து அதாவது சிலாங்கூர் சுல்தானாக அரியணை அமர்ந்த பிறகு கார் பந்தயத்தில் சுல்தான் மீண்டும் பங்கேற்றார். இரண்டாவது முறையாக நடத்தப்பட்ட பீக்கிங் முதல் பாரிஸ் வரையிலான அந்த போட்டியில் அவர் 1940 ஆண்டில் தயாரிக்கப்பட்ட சவர்லெட் ஃபங்கியோ கூப் ரக காரை பயன்படுத்தினார். ரஷ்யா மற்றும் மங்கோலியாவை 35 நாட்களில் கடந்த பிறகு ஆட்சியாளர் என்ற முறையில் மாநில நிர்வாகத்தை கவனிப்பதற்காக தாயகம் திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

சுல்தான் ஷராபுடின் 1945ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் தேதி கிள்ளான், இஸ்தானா ஜெமஹாவில் பிறந்தார். அப்போது அவரின் தந்தையார் மறைந்த சுல்தான் சலாவுடின் அப்துல் அஜிஸ் ஷா சிலாங்கூரின் பட்டத்து இளவரசராக இருந்தார்.

பிறந்த போது துங்கு இட்ரிஸ் ஷா என பெயரிடப்பட்ட சுல்தான் ஷராபுடின், 1960ஆம் ஆண்டு தந்தை சிலாங்கூர் சுல்தானாக அரியணை அமர்ந்ததைத் தொடர்ந்து தனது 15வது வயதில் ராஜா மூடாவாக பிரகடனப் படுத்தப்பட்டார்.

சுல்தான் சலாவுடின் அவர்களின் மறைவைத் தொடர்ந்து 2001ஆம் ஆண்டில் மாநில சுல்தானாக சுல்தான் ஷராபுடின் நியமனம் பெற்றார்.

தனது 75வது பிறந்த நாளை கொண்டாடும் சுல்தான் ஷராபுடின், உடலரோக்கியத்துடனும் நீண்ட ஆயுளோடும் வாழவும் மேன்மை தங்கிய சுல்தானின் நல்லாட்சியின் கீழ் மாநிலம் தொடர்ந்து வளர்ச்சி காணவும் சிலாங்கூர் மக்கள் பிரார்த்திக்கின்றனர்.

**டவுலாட் துவாங்கு**

# சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ்

# வாழ்க்கை வரலாறு

24 டிசம்பர் 1945 – மாட்சிமை தங்கிய சுல்தான் பிறந்தார்

1954–1959 – கோலாலம்பூர், ஜாலன் ராஜா மூடா, மலாய் ஆரம்ப பள்ளியிலும் கோலாலம்பூர் செண்ட். ஜோன் இன்டியூஷனிலும் ஆரம்ப கல்வியைப் பெற்றார்.

1960–1968 – ஆஸ்திரேலியாவின் பெர்த் நகரிலுள்ள ஹேல் பள்ளியிலும் இங்கிலாந்தின் சர்ரே நகரிலுள்ள லேங்ஹஸ்ட் கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்தார்.

3 செப்டம்பர் 1960 – சிலாங்கூரின் 8வது ராஜா மூடாவாக பிரகடனப்படுத்தப்பட்டார். மலேசியாவின் முதலாவது மிக இளம் வயது பட்டத்து இளவரசர் என்ற பெருமையையும் பெற்றார்.

1968 – சிலாங்கூர் அரசு செயலகம், கோலாலம்பூர் மாவட்ட அலுவலகம் மற்றும் கோலாலம்பூரில் உள்ள போலீஸ் துறை ஆகியவற்றில் அரசாங்க நிர்வாகப் பணிகளை ஏற்றார்

23 பிப்ரவரி 1969 – தமது தந்தையார் சுல்தான் சலாவுடின் இங்கிலாந்து பயணம் மேற்கொண்ட போது அரச மன்றத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

14 மார்ச் 1970 – சிலாங்கூரின் ராஜா மூடாவாக நியமனம் பெற்றதோடு இடைக்கால ஆட்சியாளராகவும் அதிகாரப்பூர்மாக பொறுப்பேற்றார்.

1975 – கினபாலு மலை ஏறினார்.

1986 – சபா மாநிலத்தின் கோத்தா கினபாலுவிலிருந்து சரவா மாநிலத்தின் கூச்சிங் வரையிலான (1,111 கிலோமீட்டர்) புரோட்டோன் சாகா நெடுந்தூரப் பந்தயத்தில் பங்கு கொண்டார்.

1987 – மலேசிய–சிங்கப்பூர் பழைய வாகன பதிவகம் நடத்திய வின்டேஜ் இக்குவேட்டர் ரன் 87 எனும் போட்டியில் பங்கேற்றார். இந்த போட்டியில் தனது எம்.ஜி. ஜே2 ரக காரில் சிங்கப்பூரிலிருந்து ஜொகூர் கோத்தா திங்கி வரை சென்று திரும்பினார்.

1993 – லுய்ஸ் வூய்ட்டன் வின்டேஜ் கார் இக்குவேட்டர் ரன் போட்டியில் பங்கேற்று தனது போர்ட் பி துடுர் ஆர் ரக காரில் சிங்கப்பூரிலிருந்து கோலாலம்பூர் வந்தடைந்தார்.

1995–1996 – தனது எஸ்.வை. ஜூக்ரா ஆடம்பர படகில் நான்கு பணியாளர்களுடன் உலகை வலம் வரும் பயணத்தை மேற்கொண்டார். இந்த 22 மாத கால பயணத்தில் அவர் மூன்று கடல்கள், 14 கடற்கரைகள், 3 கால்வாய்கள் 159 துறைமுகங்களைக் கடந்து 27,940 கடல் மைல் பயணத்தை முடித்தார்.

1997 – பீக்கிங் முதல் பாரிஸ் வரையிலான 16,000 கிலோமீட்டர் பழைய கார் பந்தயத்தில் பங்கேற்றார். இந்த 43 நாள் பந்தயத்தில் தனது போர்ட் சலுன் மோடல் பி ரக காரை பயன்படுத்தி சீனா வழியாக மங்கோலியா, திபெத், நேப்பாளம், இந்தியா, பாகிஸ்தான், ஈரான், துருக்கி, கிரீஸ், இத்தாலி, ஆஸ்திரியா, சுவிட்ஸர்லாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளைக் கடந்தார்.

1998 – 27,940 கடல் மைல்களைக் கடந்து உலகை கடல் மார்க்கமாக வலம் வந்த மற்றும் 11 நாடுகள் வழியாக 16,000 கிலோமீட்டர் தொலைவைக் கடந்து பீக்கிங்–பாரிஸ் வாகன சவால் போட்டியை முடித்த மலேசியாவின் முதல் அரச குடும்ப உறுப்பினர் என்ற பெருமைக்காக மலேசிய சாதனை புத்தகத்தில் இடம் பிடித்தார்.

19 நவம்பர் 1998– பீக்கிங் முதல் பாரிஸ் வரை எனும் புத்தகத்தை தனது சக காரோட்டுநர் ரிச்சர்ட் கெர்டிசுடன் இணைந்து எழுதி வெளியிட்டார்.

24 ஏப்ரல் 1999 – தன் தந்தை நாட்டின் 11 பேரரசராக பதவியேற்றதைத் தொடர்ந்து சிலாங்கூர் ரீஜண்டாக நியமிக்கப்பட்டார்.

21 நவம்பர் 2001 – சுல்தான் ஷராபுடின் அவர்களின் தந்தை சுல்தான் சலாவுடின் அப்துல் அஜிஸ் ஷா அல்ஹாஜ் இப்னி அல்மார்ஹூம் சுல்தான் ஹிஷாமுடின் ஆலம் ஷா அல்ஹாஜ் அவர்கள் கோலாலம்பூர், இந்தான் கிளேனிகல்ஸ் மருத்துவமனையில் காலமானார்.

22 நவம்பர் 2001 – சுல்தான் ஷராபுடின் இட்ரிஸ் ஷா அல்ஹாஜ் இப்னி அல்மார்ஹூம் சுல்தான் சலாவுடின் அப்துல் அஜிஸ் ஷா அல்ஹாஜ் என்ற பட்டப் பெயருடன் சிலாங்கூரின் 9வது சுல்தானாக பிரகடனப்படுத்தப்பட்டார்.

3 மே 2002 – அவரின் புதல்வர் துங்கு அமிர் ஷா மாநிலத்தின் ராஜா மூடாவாக பிரகடனப்படுத்தப்பட்டார்.

8 மார்ச் 2003 – சிலாங்கூரின் 9வது சுல்தானாக அரியணை அமர்ந்தார்.

2000–2005 – மாரா தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் (யு.ஐ.டி.எம்.) இணை வேந்தராக பொறுப்பு வகித்தார்.

2002 – மலேசிய புத்ரா பல்கலைக்கழகத்தின் (யு.பி.எம்.) வேந்தராக நியமனம் பெற்றார். அதே ஆண்டில் அரச மலேசிய கடற்படையின் அட்மிரலாக பதவி உயர்த்தப்பட்டார்.

2004 – பாஸ்கால் எனப்படும் அரச மலேசிய கடற்படையின் சிறப்பு போர்ப் படைப் பிரிவின் உயரிய கௌரவ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

2007 – இரண்டாவது பீக்கிங்–பாரிஸ் கார் பந்தயத்தில் பங்கேற்றார். 1940ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட சவர்லெட் ஃபாங்கியோ கூப் ரக காரில் ரஷ்யா மற்றும் மங்கோலியாவில் 35 நாட்கள் பயணம் மேற்கொண்டார்

2007 – பீக்கிங் முதல் பாரிஸ் வரை எனும் தலைப்பிலான இரண்டாவது புத்தகத்தை தனது சக கார் ஓட்டுநர்களான டத்தோ ரிச்சர்ட் கெர்டிஸ் மற்றும் சைட ஹைசாம் ஜமாலுல்லாய்ல் ஆகியோருடன் இணைந்து எழுதினார்

2009 – அமெரிக்காவின் சன் பிரான்சிஸ்கோவில் உள்ள ஸ்டன்போர்ட் பல்கலைக்கழக மருத்துவ மையத்தில் இரத்த நாள மாற்று அறுவை சிகிச்சையை மேற்கொண்டார்

2011– மேன்மை தங்கிய சுல்தானின் தாயார் ராஜா சைடாதுல் இசான் துங்கு படார் ஷா மூப்பின் காரணமாக அம்பாங் புத்ரி மருத்துவமனையில் காலமானார்

31 ஆகஸ்டு 2016 – மேன்மை தங்கிய தெங்கு பெர்மைசூரி நோராஷிகின் அவர்களை மணம் புரிந்தார்

# சொந்த வீடு பெறுவதை ஊக்குவிக்க
## புதிய குடியிருப்புக் கொள்கை வரையப்படும்



ஷா ஆலம் — மாநில மக்களிடையே முதலாவது சொந்த வீட்டைப் பெறும் கனவை நனவாக்க சிலாங்கூர் அரசு புதிய வீடமைப்பு கொள்கையை வரையவுள்ளது.

வங்கிகளின் கடுமையான நிபந்தனைகளை கருத்தில் கொண்டு விண்ணப்பதாரர்களின் வாங்கும் திறன், அவர்களின் வாழ்க்கைத் தரம் போன்ற அம்சங்களை இந்த கொள்கை கவனத்தில் கொள்ளும் என்று வீடமைப்புத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் ரோட்சியா இஸ்மாயில் கூறினார்.

கடந்த 2014ஆம் ஆண்டு முதல் சிலாங்கூர் கூ வீடுகளுக்கு விண்ணப்பம் செய்த 64,072 பேரில் 30,793 பேருக்கு மட்டுமே வங்கிக் கடன் கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறைந்த வருமானம் பெறுவோருக்கு உதவும் வகையில் சிலாங்கூர் கூ வீடமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆயினும் விண்ணப்பம் செய்தவர்களில் பாதிக்கும் குறைவானோருக்கு மட்டுமே வங்கி கடன் கிடைத்துள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு அதிகமானோர் சொந்த வீடு பெறுவதற்கு ஏதுவாக சாத்தியமான வழிகளை நாம் ஆராய வேண்டியுள்ளது என்றார் அவர்.

சிலாங்கூர் கூ வீடுகள் 42,00 வெள்ளி முதல் 250,000 வெள்ளி வரையிலான விலையில் விற்கப்படுகின்றன

# சிலாங்கூர் கூ வீடுகளுக்கான நிபந்தனை
## மாற்றத்தின் வழி மேலும் 30,000 வீடுகள் நிர்மாணிப்பு



ஷா ஆலம் – சிலாங்கூர் கூ வீடமைப்புத் திட்டத்தில் ஏ, பி, சி, டி மற்றும் ஈ பிரிவு வீடுகளுக்கான நிபந்தனை மாற்றத்தின் வழி மேலும் 30,000 வீடுகளைக் கட்டுவதற்குரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சிலாங்கூர் கூ திட்டத்தில் மேலும் முப்பதாயிரம் வீடுகள் கட்டப்படும் என அண்மையில் தாக்கல் செய்யப்பட்ட 2021ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டது. இதன் வழி அடுத்த மூன்றாண்டுகளில் அறுபதாயிரம் வீடுகளை கட்டுவதற்கான சாத்தியம் உண்டாகியுள்ளது.

இந்த நிபந்தனை மாற்றத்தின் வழி 1,000 சதுர அடி பரப்பில் 250,000 வெள்ளிக்கும் மேற்போகாத விலையில் சிலாங்கூர் கூ இடாமான் மற்றும் ஹராப்பான் வீடுகளைக் கட்டும் பணிகளை மேம்பாட்டாளர்கள் துரிதப்படுத்த இயலும் என கருதப்படுகிறது.

அடுத்த ஈராண்டுகளுக்கு இத்தகைய வீடுகளைக் கட்டுவதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக சிலாங்கூர் மாநில வீடமைப்பு மற்றும் சொத்துடைமை வாரியத்தின் நிர்வாக இயக்குநர் டத்தோ டாக்டர் ஜோஹாரி அகமது கூறினார்.

வரும் 2022 டிசம்பர் 31ஆம் தேதிக்குள்ள அந்த வீடுகளை கட்டி முடிக்க வேண்டும் என மேம்பாட்டாளர்களுக்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். மேம்பாட்டாளர்கள் சமர்ப்பிக்கும் அனைத்து விண்ணப்பங்களும் சிலாங்கூர் கூ வீடமைப்புத் திட்ட பணிக்குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு ஒப்புதலுக்காக மாநில ஆட்சிக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்றார் அவர்.






# சுணக்கம் கண்ட
## ரவாங்-பத்தாங் பெர்ஜூந்தை சாலை மேம்பாட்டு பணிகள் மீண்டும் தொடக்கம்

ஷா ஆலம்– குத்தகையாளரின் பலவீனம் காரணமாக கடந்தாண்டு ஆகஸ்டு மாதம் முதல் கைவிடப்பட்ட ரவாங்–பத்தாங் பெர்ஜூந்தை சாலையை தரம் உயர்த்தும் பணிகள் அடுத்தாண்டு மார்ச் மாதம் முற்றுப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பண்டார் கண்ட்றி ஹோம் சாலை சந்திப்பு முதல் கோல சிலாங்கூர் எல்லை வரையிலான அந்த சாலையை சீரமைக்கும் பணிகளை புதிய குத்தகையாளர் கடந்த அக்டோபர் மாதம் முதல் முழுவீச்சில் மேற்கொண்டு வருவதாக ரவாங் சட்டமன்ற உறுப்பினர் சுவா வேய் கியாட் கூறினார்.

சுமார் மூன்றரை கோடி வெள்ளி மதிப்பிலான இந்த திட்டத்தை 18 மாதங்களில் முடிப்பதற்கு ஏதுவாக புதிய குத்தகையாளரை பொதுப்பணித்துறை நியமித்துள்ளது என்று அவர் சொன்னார்.

ஆற்றின் கரைகளை மேம்படுத்துவது மற்றும் கம்போங் சுங்கை பாக்காவ், ஜாலான் சவுஜானா ரவாங் ஆகிய பகுதிகளில் உள்ள குறுகலான சாலைகளை விரிவுபடுத்து ஆகிய பணிகளையும் புதிய குத்தகையாளர் மேற்கொள்வார் என்றார் அவர்.

இந்த திட்டத்தை புதிய குத்தகையாளர் தொடங்குவதற்கு முன்னர் வெள்ளம் ஏற்படும் பகுதிகளில் சாலையை தரம் உயர்த்தும் பணிகளை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நடவடிக்கையின் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் இதர பணிகள் மேற்கொள்ளப்படுவதற்குரிய சூழல் ஏற்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

# பள்ளி பேருந்து நடத்துநர்களுக்கு உதவ சிறப்புத் திட்டத்தை வரைவீர்
# மத்திய அரசுக்கு ஜோர்ஜ் குணராஜ் வலியுறுத்து

ஷா ஆலம் – கோவிட்–19 நோய்த் தொற்று பரவல் காரணமாக வருமானம் பெரிதும் பாதிக்கப்பட்ட பள்ளி பேருந்து நடத்துநர்களுக்கு




உதவும் வகையில் சிறப்புத் திட்டத்தை வரையும்படி மத்திய அரசை செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் ஜோர்ஜ் குணராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

பேருந்து கட்டணத்தை மட்டும் முழுமையாக நம்பியிருக்கும் இந்த பேருந்து நடத்துநர்கள் பேருந்துக்கான தவணைப் பணத்தை கட்ட வேண்டிய கட்டாயத்தில் உள்ளதாக அவர் சொன்னார்.

தனித்து வாழும் தாய்மார்களில் பலரும் இந்த பள்ளி பேருந்து நடத்துநர் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். வாகனங்களுக்கான மாதாந்திர தவணைப் பணத்தை செலுத்துவது இவர்களுக்கு பெரும் சுமையாக உள்ளது என்றார் அவர்.

இத்தகைய தரப்பினருக்கு உதவும் வகையில் மாதாந்திர தவணைப் பணத்தை செலுத்துவதை ஒத்தி வைப்பது போன்ற திட்டங்களை அமல்படுத்துவது குறித்து நிதியமைச்சு ஆராயலாம் என்றும் அவர் ஆலோசனை கூறினார்.

பள்ளி பேருந்து நடத்துநர்களுடன் பல முறை சந்திப்புகள் நடத்தப்பட்டதை சுட்டிக் காட்டிய அவர், அத்தரப்பினரின் சுமையைக் குறைக்கும் வகையில் உதவித் திட்டங்களை அரசாங்கம் அமல்படுத்தும் என தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் சொன்னார்.

# ஆலய விவகாரத்தில் மந்திரி புசாரின் பொறுப்பற்ற பேச்சு- பக்கத்தான் ஹராப்பான் இளைஞர் பிரிவுத் தலைவர் நிக் நஸ்மி கண்டனம்



ஷா ஆலம் – கோல கெடா, தாமான் பெர்சத்துவில் உள்ள ஸ்ரீ ராஜ முனீஸ்வரர் ஆலயம் உடைக்கப்பட்ட விவகாரம் குறித்து பொறுப்பற்ற முறையில் கெடா மந்திரி புசார் முகமது சனுசி முகமது நோர் வெளியிட்டு வரும் கருத்துக்களுக்கு பக்கத்தான் ஹராப்பான் இளைஞர் பிரிவுத் தலைவர் நிக் நஸ்மி நிக் அகமது கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆலய உடைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்த மஇகா மற்றும் ஜசெக தலைவர்களை குற்ற உணர்வு சிறிதுமின்றி 'கள் குடிப்பவர்களுடன்' ஒப்பிட்டு பேசிய முகமது சனுசியின் செயல் இஸ்லாமிய அரசியலுக்காக போராடும் அவரின் தோற்றத்தை பிரதிபலிப்பதாக இல்லை என்று அவர் கூறினார்.

அந்த ஆலயத்தை உடைக்கும் விவகாரத்தில் அவசரம் காட்டாமல் ஆலய பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்தியிருக்கலாம் என்பது தமது கருத்தாகும் என்று செத்தியா வங்சா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினருமான அவர் சொன்னார்.

நாட்டில் அனைத்து விதமான வழிபாட்டுத் தலங்களையும் கட்டுவதற்கு அனுமதி தேவை என்பதை கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். முனீஸ்வரர் ஆலயம் உடைக்கப்பட்ட விவகாரத்திலும் இதுவே மந்திரி புசாரின் முக்கிய வாதமாகவும் உள்ளது. எனினும், பேச்சு வார்த்தையின் மூலம் இப்பிரச்னைக்கு சுமூகமான தீர்வு கண்டிருக்கலாம் என்றார் அவர்.

வழிபாட்டுத் தலங்கள் தொடர்பான விவகாரங்கள் மிகவும் உணர்ச்சிகரமானவை என்பதோடு இன பிரச்னைகளுக்கும் இது வழி வகுக்கும். ஆலயத்தை உடைப்பதால் இந்துக்களுக்கு ஏற்படும் உணர்வு ரீதியான விளைவுகளை மந்திரி புசார் அறிந்திருக்க வேண்டும் என்று அவர் மேலும் சொன்னார்.

# சுற்றுலாத் துறையினருக்கு 1,000 வெள்ளி உதவித் தொகை
# சிலாங்கூர் அரசுக்கு சங்கத் தலைவர் பெருமாள் நன்றி

ஷா ஆலம் – சுற்றுலாத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு சிலாங்கூர் மாநில அரசு வழங்க முன்வந்துள்ள ஆயிரம் வெள்ளி உதவித் தொகை கோவிட்–19 பெருந்தொற்று ஏற்படுத்திய நெருக்கடியிலிருந்து மீள அத்தரப்பினருக்கு ஓரளவு உதவி புரியும்.

கடந்த மார்ச் மாதம் முதல் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும் சுற்றுலாத் துறையில் தொடர்ந்து தாக்குப் பிடிக்க இந்த சிறப்புத் தொகை உதவி புரியும் என்று சிலாங்கூர் மாநில சுற்றுலா பேருந்து ஓட்டுநர் சங்கத்தின் தலைவர் எம். பெருமாள் நம்பிக்கைத் தெரிவித்தார். கோவிட்–19 பெருந்தொற்று பரவல் காரணமாக சிலாங்கூர் மட்டுமின்றி நாடு முழுவதும் சுற்றுலாத் துறை ஏறக்குறைய முற்றிலுமாக முடங்கி விட்டதாக அவர் சொன்னார்.

மாநில அரசு வழங்கியுள்ள இந்த உதவித் தொகை எங்களை நிம்மதி பெருமூச்சு விடச் செய்துள்ளதோடு சவால்மிக்க இக்காலக்கட்டத்தை சமாளிப்பதற்கும் உதவியுள்ளது என அவர் குறிப்பிட்டார்.




இதனிடையே, சுற்றுலாத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு மாநில அரசு தொடர்ந்து உதவி வழங்கி வரும் எனத் தாம் எதிர்பார்ப்பதாக கோல சிலாங்கூர் சமூக உபசரிப்பாளர் பிரதிநிதி அப்சால் அசாரி கூறினார்.

சுற்றுலாத் துறை அடுத்தாண்டில் மீண்டும் உத்வேகம் பெறுவதற்கு ஏதுவாக நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை இனியும் தொடரப்படாது என நாங்கள் பெரிதும் எதிர்பார்க்கிறோம் என்றார் அவர்.







# இந்து ஆலயங்களுக்குக் கோலக் கிள்ளான் சட்டமன்ற உறுப்பினர் அஸ்மிஷாம் நிதி உதவி



கோலக் கிள்ளான் – கோலக் கிள்ளான் சட்டமன்ற உறுப்பினர் அஸ்மிஷாம் ஷாமான் ஹுரி அவர் சட்டமன்ற அலுவலகத்தில் 12 இந்து ஆலயங்களுக்கு மானியம் வழங்கினார்.

பண்டமாரான் பெர்மாயிலுள்ள அவரின் சட்ட மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற நிதி வழங்கும் வைபவத்திற்கு நடப்பிலுள்ள நடமாட்டக் கட்டுப்பாடு விதிகளுக்கு ஏற்ப ஆலயத்தலைவர்கள் மட்டும் அழைக்கப் பட்டிருந்தனர். அவர்களுடன் கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு சார்ல்ஸ் சந்தியாகோ, கோல லங்காட் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோ டாக்டர் சேவியர் ஜெயக்குமார் மற்றும் அவ்வட்டார நகராட்ச்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

அந் நிகழ்ச்சி குறித்துக் கருத்துரைத்த இத்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அஸ்மிஷாம் அவர் தொகுதியில் உள்ள 12 இந்து ஆலயங்களுக்கும் தனது சட்டமன்ற உறுப்பினர் ஒதுக்கீட்டிலிருந்து இந்தத் தொகையை வழங்குவதாகவும். ஆலயங்கள் மாநில அரசாங்கத்திடமிருந்து நிதியும் பெற முடியும், அதற்கு ஆதரவுக் கடிதங்களையும் ஆலயங்களுக்கு வழங்கி வருவதாகவும் கூறினார்.

சிலாங்கூர் மாநிலத்தில் கெஅடிலான் கூட்டணி கட்சிகளின் ஆட்சி நடந்து வருகிறது, இங்கு, மொழி சமய வேறுபாடுகளின்றி ஆண்டுதோறும் எல்லாச் சமய ஆலயங்களுக்கு மட்டுமின்றி எல்லாத் தாய் மொழிப் பள்ளிகளுக்கும் மாநில அரசின் மூலம் மானியங்கள் வழங்கி வருவது இந்த அரசாங்கம் எல்லாச் சமயங்களையும் மதிப்பதற்கான அடையாளமாகும்.

அந்த ரீதியில் சட்ட மன்ற உறுப்பினராகத் தனது ஒதுக்கீட்டிலிருந்தும் ஆலயங்களுக்கு மானியம் அளிப்பதானது. நாங்கள் அனைத்துச் சமயத்தினரும் மதிக்கிறோம், எல்லா மக்களும் ஒருவரை ஒருவர் மதித்து வாழ்வதற்கு அரசாங்கமே முன் உதாரணமாக விளங்க வேண்டும் என்பதில் ஆழமான அக்கறை கொண்டவர்கள் நாங்கள்.

நம் நாட்டில் மக்களிடையே நற்பண்புகளை விதைப்பதில் அரசியல் வாதிகளும் அரசாங்கங்களும் முன் உதாரணமாக விளங்க வேண்டும், அதன் வழியே நாம் சகோதரத்துவத்தை வளர்க்க முடியும் என்றார் அவர்.

# புதிய பாணியில் தீபாவளி உபசரிப்பை நடத்தினார் செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் குணராஜ்





கிள்ளான் – கோவிட்-19 பெருந் தொற்று பரவலைத் தடுக்கும் வகையில் புதிய பாணியில் தீபாவளி பொது உபசரிப்பை நடத்தினார் செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஜோர்ஜ் குணராஜ்.

பொது மக்கள் வாகனங்களில் இருந்தவாறே உணவுப் பொட்டலங்களை பெற்றுச் செல்லும் வகையில் இந்த பொது உச்சரிப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த உபசரிப்பில் சுமார் ஆயிரம் பேருக்கு உணவுப் பொட்டலங்களும் குளிர் பானங்களும் வழங்கப் பட்டதாக குணராஜ் சொன்னார்.

நிபந்தனையுடன் கூடிய நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை பிற்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிர்ணயிக்கப்பட்ட நிர்வாக நடைமுறைக்கேற்ப இந்த தீபாவளி பொது உபசரிப்பு நடத்தப்பட்டது என்றார் அவர்.

மலாய்க்காரரர் மற்றும் சீனர்களும் கலந்து கொண்டது இந்நிகழ்வுக்கு பெருமையளிக்கும் விதமாக அமைந்தது. இது இன நல்லிணக்கத்தையும் புலப்படுகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த தொகுதியில் உள்ள ஐந்து மண்டலங்களை உள்ளடக்கிய தீபாவளி கூடாரங்களை அழகு படுத்தும் போட்டி நடத்தப்பட்டு வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

# 2021ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்
## ஏழைத் தமிழர்களை கல்வியில் முடவர்களாக்கும் - டாக்டர் சேவியர் ஜெயக்குமார்

கோலாலம்பூர் – மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பாக இந்திய வம்சாவழி உறுப்பினர்கள் பிஎன் அரசாங்கத்தின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு \ செலவு பட்ஜெட்டை நிராகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

நாடும் மக்களும் மிகக் கடுமையான நோய் தொற்று மற்றும் பொருளாதாரச் சவால்களை எதிர்நோக்கியுள்ள இவ்வேளையில் பிரதமர் மொகிதீன் யாசினின் அரசாங்கம், நாட்டு மக்களின் அவலம் நீக்கப் பாடுபட வேண்டும், ஆனால், நாடாளுமன்றத்தில் இந்த அரசாங்கம் சமர்ப்பித்த பட்ஜெட் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை.

பி.என் அரசாங்கத்தின் 2021ம் ஆண்டுக்கான பட்ஜெட், கோவிட் -19 நோய்த் தொற்றால் பாதிக்கப் பட்டவர்களுக்கும், நடமாட்ட கட்டுப்பாடு விதிகளில் வெகுவாகப் பாதித்துள்ள துறைகளுக்கு, குறிப்பாகச் சுகாதாரத்துறைக்கும், வேலை இழந்தவர்கள் மற்றும் வாழ்வில் மிகவும் பின் தங்கிய மக்களின் நல்வாழ்வுக்கும் போதுமான ஒதுக்கீடுகளை 2021ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் வழங்க வில்லை என்பதை அம்பலப் படுத்துவதாக உள்ளது.


அதே வேளையில் நாட்டு மக்களிடையே வேற்றுமையைத் தூண்டும் இயக்கங்களுக்கும், சில அமைச்சர்களின் கைப்பாவையாகச் செயல்படும் ஜாசா போன்ற அமைப்புகளுக்கும் 85.5 மில்லியன் ஒதுக்கீடுகளைச் செய்துள்ள நிதி அமைச்சர் ஏழைகளின் அத்திவாசிய தேவைகளைக் கூட ஊதாசீனப் படுத்தியுள்ளது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியது.

பள்ளிக்கூடங்களே, நாட்டில் பின் தங்கிய மக்களை மிக இலகுவாக அடையாளம் காணும் இடம். தமிழ்ப்பள்ளிகளின் அவல நிலை, இந்தியச் சமுதாயமும் நீண்ட நாட்களாகக் கைவிடப் பட்டுள்ளதை நாட்டுக்கு உணர்த்தும் தெளிவான அடையாளமாக இருந்து வருகிறது.

அதனை அடையாளம் கண்டு, தமிழ்ப்பள்ளிகளை மேம்படுத்தும் வண்ணமாகக் கடந்த 2015ம் ஆண்டு தொடங்கிப் பாரிசான் நேஷனல் மற்றும் பக்காத்தான் ஹராப்பான் ஆட்சிக் காலத்தில் அப்பள்ளிகளின் மேம்பாட்டுக்கு ஒதுக்கி வந்து 50 மில்லியன் சிறப்பு நிதி ஒதுக்கீடுகளை 2021 பட்ஜெட்டில் 30 மில்லியனாகக் குறைத்துள்ளது, ஏழைச் சமுதாயத்தை முற்றாகக் கைவிட்டதற்கு ஒப்பாகும்!

பல தமிழ்ப்பள்ளிகள் குறைவான மாணவர்கள் எண்ணிக்கையுடன் தோட்டப்புறங்களில் செயல்பட்டு வரும் வேளையில், நகர்ப்புறங்களிலும் புதிய வீடமைப்பு பகுதிகளிலும் தமிழ்ப்பள்ளிகள் இல்லாததால், இந்திய மாணவர்களை மற்ற மொழிப் பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனை அவசரமாகச் சரி படுத்த அரசாங்கம், பாதிக்கப் பட்ட அப் பள்ளிகளைப் பட்டணங்களுக்கு இடம் மாற்றம் செய்யப் பட்ஜெட்டில் ஒதுக்கீடுகளை மறுப்பது, மறைமுகமாகத் தமிழ்ப்பள்ளிகளை ஒழிக்க நோக்கம் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

மலேசியாவின் 1996ம் ஆண்டு கல்வி சட்டக்கூறுகள், நான்கு முதல் ஆறு வயதுக்கு உட்பட்ட மாணவர்களைப் பாலர்பள்ளிகளுக்கு அனுப்ப வகை செய்திருந்தும். இன்றுவரை 55 விழுக்காட்டுக்கு அதிகமாகத் தமிழ்ப்பள்ளிகள் பாலர் பள்ளிகளின்றிச் செயல்படுகின்றன. அதிலும் பல முறையான கட்டடங்களுக்கும், போதிய மாணவர்களுக்கு இடமளிக்காமலும் இருப்பதாதாகத் தெரிகிறது.



ஒரு அரசாங்கத்தின் சட்டத் திட்டங்களை, (1996ஆம் ஆண்டு கல்வி சட்டக்கூறுகளை) தமிழ்ப்பள்ளிகளின் மேம்பாட்டில் மட்டும் அமல்படுத்தாமல் 25 ஆண்டுகளாகக் கிடப்பில் போட்டுள்ளது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தமிழ்ப்பள்ளிகளுக்கான ஒதுக்கீடுகளை மேலும் குறைத்து ஏழைத் தமிழர்களையும் அவர்களின் குழந்தைகளையும் கல்வியில் முடவர்களாக்கும் ஒரு பட்ஜெட்டுக்கு நாங்கள் ஒரு போதும் துணைப் போக முடியாது என்பதனை உறுதிப்பட எடுத்துரைக்கிறோம்.

பல தமிழ்ப்பள்ளிகளின் கட்டடங்கள் பயன்பாட்டுக்குப் பொருந்தாது என்பதனை JKR எனப்படும் மராமத்து இலாக்கா மற்றும் தீயணைப்பு துறையினர் உறுதிப்படுத்தியிருந்தும் அப்பள்ளிகளை மேம்படுத்தப் போதுமான ஒதுக்கீடுகளை நிதி அமைச்சு வழங்காதது ஏன்? இன்னும் எத்தனைக் காலம் அந்தப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளை ஆபத்தின் விளிம்பில் வைத்திருக்க இந்த அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

தமிழ்ப்பள்ளிகளுக்கு செல்லும் ஏழை பிள்ளைகளின் உயிருடன் விளையாடும் ஒரு விபரீதச் செயலாகும். இது போன்ற விபரீதங்களை எதிர்த்து எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும் குரல் எழுப்ப வேண்டும், அந்தக் குழந்தைகள் மீது அக்கறை கொண்ட நாங்கள் இந்தப் பட்ஜெட்டை நிராகரிக்கிறோம் என்றார் கோலலங்காட் நாடாளுமன்ற உறுப்பினரும், கெஅடிலான் கட்சியின் தேசிய உதவித் தலைவருமான டத்தோ டாக்டர் சேவியர் ஜெயக்குமார்

# சுற்றுச் சூழல் குற்றங்கள் குறித்து தகவல் தருவோருக்கு வெ. 20,000 வெகுமதி - சிலாங்கூர் அரசு அறிவிப்பு

ஷா ஆலம் – சுற்றுச் சூழல் குற்றங்களை புரிந்தவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும் அளவுக்கு தகவல்களை தருவோருக்கு சிலாங்கூர் அரசு வெகுமதியாக 20,000 வெள்ளியை வழங்கும்.

மாநிலத்தின் நீர் வளத்தை பாதுகாப்பிலும் நீர் வளங்களின் பாது காப்பிற்கெதிரான குற்றச் செயல்களை தடுப்பதிலும் பொதுமக்களின் பங்கேற்பு முக்கியமானது என்று மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

நீர் வளங்களை மாசு படுத்துவோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் தண்டனை பெறும் வகையில் பயனான தகவல்களை பொது மக்களிடமிருந்து தொடர்ச்சியாக எதிர் பார்க்கிறோம் என்றார் அவர்.

நீர் தூய்மைக்கேட்டு பிரச்சினையின் தாக்கத்தை குறைப்பதற்காக குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட காலத் திட்டங்களை அரசு வரைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நீர் தூய்மைக்கேட்டுக்கு காரணமானவர்களுக்கு கட்டாயச் சிறைத்தண்டனை மற்றும் பத்து லட்சம் வெள்ளி வரையிலான அபராதம் விதிக்க வகை செய்யும் சட்ட மசோதாவை மாநில சட்டமன்றம் இம்மாத தொடக்கத்தில் அங்கீகரித்து.



## நாட்டில் ஊழல் கடுமையான பிரச்சனை என 71 விழுக்காட்டு மலேசியர்கள் கருதுகிறார்களா?

# - பி.ஏ.சி. அதிர்ச்சி



கோலாலம்பூர் – அரசாங்கத்தில் ஊழல் ஒரு கடுமையான பிரச்சனையாக உள்ளதாக 71 விழுக்காட்டு மலேசியர்கள் கருதுகின்றனர் என்ற ஜிசிபி எனப்படும் உலக ஊழல் அளவீடு அமைப்பின் 2020 ஆம் ஆண்டிற்கான ஆசிய அறிக்கையை பி.ஏ.சி. எனப்படும் நாடாளுமன்றத்தின் பொது கணக்கு குழு கடுமையாக கருதுகிறது. அந்த அறிக்கையை டிரான்பரன்ஸி இண்டநேஷனல் (டி.ஐ.) எனப்படும் அனைத்துலக வெளிப்படை போக்கு அமைப்பு வெளியிட்டுள்ளது.

இவ்விவகாரம் தொடர்பில் விளக்கமளிக்கும்படி டி.ஐ. அமைப்பை பொது கணக்கு குழு கேட்டுக் கொள்ளும் என்று அதன் தலைவர் வோங் கா வூ கூறினார்.

மேலும், நாட்டின் பொதுச் சேவைத் துறையில் ஊழலை ஒழிப்பதிலும் உயர் நெறியை மேம்படுத்துவதிலும் ஊழல் தடுப்பு ஆணையம் (எம்.ஏ.சி.சி.) மேற்கொண்டு வரும்

நடவடிக்கைகள் குறித்து அதன் தலைமை ஆணையர் விளக்கம் தருவார் என்று அவர் மேலும் தெரிவித்தார். நாட்டின் அரசு நிர்வாகம் மற்றும் அதன் ஊழியர்களின் உயர் நெறி மீது மக்களின் நம்பிக்கை குறைந்து காணப்படுகிறது என்பதை இந்த புள்ளி விவரம் காட்டடுவதாக பி.ஏ.சி. கருதுகிறது. மக்களின் இந்த நம்பிக்கை குறைவுக்கான காரணத்தை நாம் அடையாளம் காண வேண்டும் என்பதோடு ஊழலுக்கு எதிரான முயற்சிகளும் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் சொன்னார்.

கடந்த 12 மாதங்களில் ஊழல் அதிகரித்துள்ளதாக 39 விழுக்காட்டினர் கருதுவதோடு அவர்கள் ஊழல் தடுப்பு ஆணையத்தின் செயல்பாடுகளுக்கு 74 விழுக்காட்டு புள்ளிகளை வழங்கியுள்ளனர். மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊழல்வாதிகளை என்று 36 விழுக்காட்டு மலேசியர்கள் கருதுகின்றனர். இதர ஆசிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த எண்ணிக்கை 20 விழுக்காட்டுக்கும் குறைவாகவே உள்ளது.

## மாற்றுத் திறனாளிகளை வலுப்படுத்தும் திட்டம்

# - மந்திரி புசார் தகவல்



ஷா ஆலம்– மாற்றுத் திறனாளிகளை வலுப்படுத்தும் திட்டங்களை மேற்கொள்வதன் வாயிலாக மாநிலத்தின் வளர்ச்சியை மேலும் பொருள் பொதிந்ததாக ஆக்க முடியும் என்று மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

மாற்றுத் திறனாளிகள் விவகாரம் சமூக நலன் மட்டும் சார்ந்தது அல்ல. மாறாக, சுகாதாரம், கல்வி, சட்டம், வேலை வாய்ப்பு, அடிப்படை வசதிகள் ஆகிய அம்சங்களையும் அது உள்ளடக்கியுள்ளது என்று அவர் சொன்னார்.

மாற்றுத் திறனாளிகளின் ஆற்றல் மாநிலத்தின் சுபிட்சம் என்பது பிரதான கருப்பொருளாகவும் மாநிலத்தின் முதன்மை கோட்பாடாகவும் விளங்குகிறது. 2020 மாற்றுத் திறனாளிகள் தின வாழ்த்துக்கள் என்று தனது முகநூலில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்துலக மாற்றுத் திறனாளிகள் தினம் ஒவ்வொராண்டும் டிசம்பர் 3 ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. மலேசியாவில் கடந்த 1994 ஆம் ஆண்டு முதல் இந்த தினம் அனுசரிக்கப்படுகிறது.

மாற்றுத் திறனாளிகளின் மேம்பாட்டுக்காக மாநில அரசு 2021 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் 32.5 லட்சத்தை ஒதுக்கியுள்ளது. அனிஸ் எனப்படும் சிலாங்கூர் குடிமகன் உதவித் திட்டத்தின் வாயிலாக அத்தரப்பினருக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்படுகின்றன.

## பேராக் அரசாங்கம் கவிழ்ந்தது!

# நம்பிக்கை வாக்கெடுப்பில்

## மந்திரி புசார் அகமது பைசால் தோல்வி





ஈப்போ – பேராக் சட்டமன்றத்தில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் மந்திரி புசார் அகமது பைசால் அஸ்மு தோல்வி கண்டார். பேராக் சட்டமன்ற சபாநாயகர் முகமது ஜாகிர் அப்துல் காலிட் நடத்திய இந்த நம்பிக்கை வாக்கெடுப்பில் 10 உறுப்பினர்கள் அகமது பைசால் தலைமைத்துவதற்கு ஆதரவாகவும் 48 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். ஒரு வாக்கு செல்லுபடியாகவில்லை.

அம்னோவை சேர்ந்த பெங்காலான் பாரு சட்டமன்ற உறுப்பினர் அப்துல் மானாப் ஹஷிம் இந்த நம்பிக்கை வாக்கெடு மீதான தீர்மானத்தைக் சட்டமன்றத்தில் தாக்கல் செய்தார். பேராக் சட்டமன்றத்தில் 24 அம்னோ உறுப்பினர்களும் 4 பெர்சத்து கட்சி உறுப்பினர்களும் 3 பாஸ் கட்சி உறுப்பினர்களும் 16 ஜசெக உறுப்பினர்களும் 5 அமானா உறுப்பினர்களும் 3 பிகேஆர் உறுப்பினர்களும் உள்ளனர்.

# அந்நியத் தொழிலாளர்களுக்கு உடனடியாக கோவிட்-19 சோதனை - மந்திரி புசார் உத்தரவு

ஷா ஆலம் - மத்திய அரசு எடுத்துள்ள முடிவு ஏற்ப அந்நியத் தொழிலாளர்களுக்கான கோவிட்-19 சோதனை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சிலாங்கூர் மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி உத்தரவிட்டுள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பில் மாவட்ட பாதுகாப்பு செயல்குழு அல்லது மாவட்ட பேரிடர் நிர்வாக குழு ஊராட்சி மன்றங்கள் மற்றும் மாவட்ட சுகாதார இலாகாவுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

தீவிரம் குறைவாக உள்ள கோவிட்-19 நோயாளிகளை தனிமைப்படுத்துவதற்கும் சிகிச்சைகள் அளிப்பதற்கும் ஏதுவாக நான்கு அல்லது ஐந்து மையங்களை அடையாளம் காணும் முயற்சியில் மாநில அரசு ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது கோவிட்-19 மருத்துவமனைகளில் காணப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையை



கட்டுப்படுத்துவதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்றார் அவர்.

கோவிட்-19 நோய்த் தொற்று சம்பவங்களை கட்டுப்படுத்துவதில் மாநில அரசுக்கு உள்ள தீவிர அக்கறையை இந்நடவடிக்கை புலப்படுகிறது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

சிலாங்கூர், நெகிரி செம்பிலான், கூட்டரசு பிரதேசம், பினாங்கு, சபா, லபுவான் ஆகிய மாநிலங்களில் டிசம்பர் முதல் தேதி தொடங்கி அந்நியத் தொழிலாளர்களுக்கு கோவிட்-19 பரிசோதனை கட்டங் கட்டமாக மேற்கொள்ளப்படும் என்று பாதுகாப்புக்கான முதன்மை அமைச்சர் டத்தோ ஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப் அண்மையில் கூறியிருந்தார்.

# கோவிட்-19 தடுப்பூசியின் பாதுகாப்பு குறித்த விளக்கமளிப்பில் வெளிப்படை போக்கு தேவை - மருத்துவ நிபுணர்கள் சங்கம் கருத்து

கோலாலம்பூர் – கோவிட்-19 தடுப்பூசியின் பாதுகாப்பு குறித்து பொதுமக்ளுக்கு அரசாங்கம் தரும் விளக்கம் வெளிப்படையானதாக இருக்க வேண்டும் என்று மலேசிய பொது சுகாதார மருத்துவ நிபுணர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அந்த நோய்த் தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் மலேசியா உரிய பலனைத் பெறுவதை உறுதி செய்வதில் இதன் தொடர்பான தெளிவான விளக்கமளிப்பு மிகவும் முக்கியமானதாக விளங்குகிறது என்று அச்சங்கத்தின் தலைவர் டத்தோ டாக்டர் ஜைனால் அரிபின் ஓமார் கூறினார்.

கோவிட்-19 தடுப்பூசி தொடர்பில் பொதுமக்களிடம் காணப்படும் குழப்பத்தை நீக்கவும்




சில தரப்பினர் வெளியிடும் எதிர்மறையான கருத்துக்களை முறியடிக்கவும் இந்நடவடிக்கை பெரிதும் துணை புரியும் என்றார் அவர்.

எந்தவொரு தடுப்பூசியாக இருந்தாலும் அதன் ஆக்கத் தன்மை தொடர்பான மருத்துவ பரிசோதனைகள் வளர்ந்த நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த தடுப்பூசியை போடுவதன் வழி பரிசோதனைக்கு பயன்படுத்தப்படும் ஒரு பொருளாக நாம் ஆக்கப்படுவோம் என்ற கூற்று முற்றிலும் தவறானது என்றும் அவர் விளக்கினார்.

கோவிட்-19 தடுப்பூசி தொடர்பான குழப்பம் தரும் தகவல்கள் பொதுமக்களுக்கு குறிப்பாக அந்த தடுப்பூசி அவசியம் தேவைப்படுவோருக்கு இழப்பைத் தரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த தடுப்பூசி குறித்த உண்மையான மற்றும் நம்பகமான தகவல்களை பொதுமக்களிடம் சேர்ப்பதில் அரசு சாரா அமைப்புகள் அரசாங்கத்திற்கு உதவ வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

# சிலாங்கூரில் கோவிட்-19 நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளது

ஷா ஆலம் – சிலாங்கூரில் கோவிட்-19 சம்பவங்களின் எண்ணிக்கை அன்றாடம் உயர்வு கண்டு வந்த போதிலும் அந்த நோய்த் தொற்று இன்னும் கட்டுப்பாட்டிலே உள்ளதாக மந்திரி புசார் டத்தோ ஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

மாநிலத்தில் பதிவான சம்பவங்களில் அதிகமானவை கடுமையாக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை பிறப்பிக்கப்பட்ட இடங்களில் பதிவு செய்யப்பட்டவை என்று அவர் சொன்னார்.

சிலாங்கூரில் நிலைமை இன்னும் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். கடுமையாக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை பிறப்பிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே புதிய சம்பவங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. கடுமையாக்கப் பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையின் வாயிலாக நோய்த் தொற்றினை கட்டுப் படுத்த முடியும் என நம்புகிறோம் என்றார் அவர்.

சிலாங்கூரில் நேற்று 891 கோவிட்-19 சம்பவங்கள் பதிவாகின. அவற்றில் 795 சம்பவங்கள் நடப்பில் உள்ள தொற்று மையங்கள் மூலம் பரவியவையாகும். டோப் கிளோவ் கையுறை தொழிற்சாலையை உள்ளடக்கிய தெராத்தாய் தொற்று மையத்தில் மட்டும் 778 சம்பவங்கள் கண்டறியப்பட்டன.

கோவிட்-19 நோய்த் தொற்று சம்பவங்கள் அதிகம் காணப்படும் பகுதிகளில் கடுமையாக்கப்பட்ட நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையை அமல்படுத்தப்படுத்துவது குறித்து சிலாங்கூர் அரசு ஆலோசித்து வருவதாக மந்திரி புசார் கடந்த மாதம் கூறியிருந்தார்.

**SELANGOR INDRU**

*Sidang pengarang*

**PENASIHAT**
Lembaga Editorial MSSB


**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A. Pakiyanathan

**JURUGAMBAR**
Asri sapfie,
Raheemie Arifin,
Hafiz Othman & Fikri Yusof

**Aras 11, Menara Bank Rakyat,**
**No. 1, Jalan Indah 14/ 8,**
**Seksyen 14, 40000 Shah Alam,**
**Selangor**
*Tel: 03-55234856*
*Faks:03-55235856*
*Email: info@mediaselangor.com*

# விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியச் சட்டத்தை இயற்றுவீர் - மத்திய அரசுக்கு சிலாங்கூர் கோரிக்கை



ஷா ஆலம் – ஓய்வு காலத்தில் விளையாட்டாளர்கள் ஓய்வூதியம் பெறும் வகையில் விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியச் சட்டத்தை இயற்றும்படி மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

முன்னாள் விளையாட்டாளர்கள் பலர் வாழ்க்கையில் சிரமத்தை எதிர்நோக்குவது தொடர்பில் பல்வேறு செய்திகள் வந்தவண்ணம் உள்ளதை கருத்தில் கொண்டு மத்திய அரசு இந்த முயற்சியை முன்னெடுக்க வேண்டும் என்று இளம் தலைமுறையினர் மேம்பாடு மற்றும் விளையாட்டுத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் முகமது கைருடின் ஓத்மான் கூறினார்.

தற்போது ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்றவர்கள் மட்டுமே ஓய்வூதியம் பெறுவதற்கான தகுதியைக் கொண்டிருக்கின்றனர். இதர விளையாட்டுகள் முத்திரை பதித்தவர்களும் ஓய்வூதியம் பெறுவதற்குரிய வாய்ப்பினை அரசாங்கம் ஏற்படுத்தித் தர வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

அனைத்துலக போட்டிகளில் நாட்டை பிரதிநிதித்து பங்கேற்றவர்களுக்கும் உரிய அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என்பது நமது எதிர்பார்ப்பாகும். விளையாட்டில் பெற்ற பதக்கங்களை விற்கும் அளவிற்கு பொருளாதாரத்தில் நலிவுறும் நிலைமை விளையாட்டாளர்களுக்கு ஏற்படக்கூடாது என அவர் மேலும் குறிப்பிட்டார்

விளையாட்டாளர்களுக்கான ஓய்வூதியச் சட்டத்தை இயற்றுவதன் வழி மேலும் அதிகமான இளையோர் விளையாட்டுத் துறையில் ஈடுபடுவதை ஊக்குவிக்க முடியும் எனவும் அவர் நம்பிக்கைத் தெரிவித்தார்.

ஓய்வு காலத்தில் நிரந்தர வருமானம் கிடைப்பதற்குரிய உத்தரவாதம் உள்ளது என்ற நம்பிக்கையில் அதிகமானோர் விளையாட்டுத் துறையின் பக்கம் தங்கள் கவனத்தை திருப்புவர் எனவும் அவர் சொன்னார்.

ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக் நிரந்தர வருமானத் திட்டத்தின் கீழ் தற்போது அவ்விரு போட்டிகளிலும் பதக்கம் வென்றவர்களுக்கு மட்டுமே ஆயுள் முழுமைக்கும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

அப்போட்டிகளில் தங்கம் வென்றவர்களுக்கு பத்து லட்சம் வெள்ளி ரொக்கமும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையாக 5,000 வெள்ளியும் வழங்கப்படும். வெள்ளிப் பதக்கம் வென்றவர்களுக்கு மூன்று லட்சம் வெள்ளி வெகுமதியாகவும் 3,000 வெள்ளி ஓய்வூதியத் தொகையாகவும் வழங்கப்படும் வேளையில் வெண்கலப்பதக்கம் வென்றவர்கள் ஒரு லட்சம் வெள்ளியை வெகுமதியாகவும் 2,000 வெள்ளியை ஓய்வூதியமாகவும் பெறுகின்றனர்.

# ஆசிய இளையோர் கிண்ண ஹாக்கி போட்டி அடுத்தாண்டு ஒத்தி வைப்பு

ஷா ஆலம் – இவ்வாண்டு நடைபெற வேண்டிய ஆசிய இளையோர் கிண்ண ஹாக்கி போட்டி அடுத்தாண்டு ஜூலை மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இப்போட்டி வங்காளதேசத்தின் டாக்கா நகரிலுள்ள மௌலானா பஷானி அரங்கில் வரும் 2021 ஜூலை மாதம் முதல் தேதி தொடங்கி பத்தாம் தேவை வரை நடைபெறும்.

இப்போட்டி கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக ஏற்கனவே இரு முறை ஒத்தி வைக்கப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ஆசிய ஹாக்கி சம்மேளனம் தனது அகப்பக்கம் வாயிலாக இந்த தகவலை வெளியிட்டது.

இந்த புதிய தேதிக்கு அனைத்துலக ஹாக்கி சம்மேளனம் ஒப்புதல் வழங்கியுள்ளதாகவும் அது கூறியது. 1999ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதி அல்லது அதற்கு பின்னர் பிறந்தவர்கள் இப்போட்டியில் பங்கேற்க முடியும் என அச்சம்மேளனம் தெரிவித்தது. அடுத்தாண்டு இந்தியாவில் நடைபெறவிருக்கும் அனைத்துலக இளையோர் கிண்ண ஹாக்கிப் போட்டிக்கான தேர்வு சுற்றாகவும் இந்த போட்டி விளங்கும் என அது மேலும் குறிப்பிட்டது.

மலேசியா, சீனா, தைவான், இந்தியா, ஜப்பான், தென் கொரியா, ஓமான், உஸ்பெக்கிஸ்தான், பாகிஸ்தான், வங்காளதேசம் ஆகிய பத்து நாடுகள் இந்த போட்டியில் பங்கேற்கின்றன.

இப்போட்டியை இவ்வாண்டு ஜூன் மாதம் 4ஆம் தேதி நடத்துவதற்கு தொடக்கத்தில் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் கோவிட்- 19 நோய்த் தொற்று காரணமாக அடுத்தாண்டு ஜனவரி 30ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இருப்பினும், நோய்த் தொற்றின் தாக்கம் குறையாத நிலையில் அப்போட்டியை அடுத்தாண்டு ஜூலை மாதத்திற்கு மறுபடியும் ஒத்திவைக்க ஆசிய ஹாக்கி சம்மேளனம் முடிவெடுத்துள்ளது.

# இயங்கலை விற்பனை பிரசார இயக்கத்தின் வாயிலாக மூன்று கோடி வெள்ளி வர்த்தகம்- டத்தோ தெங் தகவல்

ஷா ஆலம் - இ-பசார் 11.11 எனும் இயங்கலை வாயிலான விற்பனை பெருவிழாவின் வழி மூன்று கோடி வெள்ளி அளவுக்கு வர்த்தகம் நடைபெற்றுள்ளதாக முதலீட்டுத் துறைகளை ஆட்சிக் குழு உறுப்பினர் டத்தோ தெங் சாங் கிம் கூறினார்.

கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக வருமானம் கடுமையாக பாதிக்கப்பட்ட வணிகர்கள் மீண்டும் புத்துயிர் பெறுவதற்கு இத்திட்டம் துணை புரிவதாக அவர் சொன்னார்.

இயங்கலை வாயிலான வர்த்தகம் துரித வளர்ச்சி கண்டு வரும் துறையாக விளங்கு வதோடு அதிக வருமானத்தையும் ஈட்டித் தருகிறது. ஆகவே, வணிகர்கள் இத்துறையில் ஈடுபட முனைப்பு காட்ட வேண்டும் என்றார் அவர்.

பொருளாதார மீட்சியை விரைவு படுத்துவதில் இலக்கவியல் முக்கிய பங்கை ஆற்றும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதால் அத்துறையில் வணிகர்கள் அதிகளவில் ஈடுபடுவதை அரசு ஊக்குவிக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

நேற்று இயங்கலை வாயிலாக நடைபெற்ற 2020 ஆம் ஆண்டிற்கான சிறந்த இணைய வர்த்தக விருதளிப்பு நிகழ்வில் அவர் இதனைக் கூறினர்.

இயங்கலை வாயிலாக லஸாடா மற்றும் ஷோப்பி ஆகிய நிறுவனங்களில் செய்யப்பட்ட வர்த்தக உபரி மதிப்பு 70 கோடி வெள்ளியை எட்டியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

**Diterbit oleh Media Selangor Sdn Bhd** Aras 11, Menara Bank Rakyat, No. 1, Jalan Indah 13/8, Seksyen 14, 40000 Shah Alam -Dicetak oleh POLARVISTA Sdn.Bhd. 15, Jalan 6/118C, Desa Tun Razak, 56000 Cheras, Kuala Lumpur. Tel: 03-91731434 Fax-03-91731412